ரூ. 8.00

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய
திங்களிதழ்




குழந்தை உள்ளமே
இறைமையின் இல்லம்

திருவள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி - கார்த்திகை
நவம்பர் 2015

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்





மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திருவள்ளுவர் ஆண்டு 2046	மாதம் : ஐப்பசி - கார்த்திகை
மலர் : 30	இதழ் : 10-11

குழந்தை உள்ளமே, இறைமையின் இல்லம்

நவராத்திரிப் பெருவிழா! வீடுகளில் விழாக்கோலங்கள்!

விதவிதமாய்ப் பல வரிசைகளில், வடிவங்களில், வண்ணங்களில் பொம்மைகள் கொலுவீற்றிருக்கின்றன! பறவைகள், விலங்குகள், மனிதர்கள், தெய்வங்கள் எனப் பல உருவங்களில் கொலுப் பொம்மைகள்! கொலுப் பொம்மைகள் பஞ்சால், களிமண்ணால், சர்க்கரையால் செய்யப்பட்டு இருக்கின்றன.

இந்தப் பொம்மைகளை தனித்தனிப் பாத்திரத்தில் தண்ணீரில் மூழ்கச் செய்தால், பஞ்சுப்பொம்மை தண்ணீரை முழுவதும் உறிஞ்சி உள்வாங்கிக்கொண்டு ஒட்டுமொத்த தண்ணீரையும் குடித்து விடுகின்றது. களிமண் பொம்மை தண்ணீரில் கரைந்து நல்ல தண்ணீரைச் சேறாக்கி விடுகின்றது. சர்க்கரைப் பொம்மை தண்ணீரில் தான் முழுவதுமாகக் கரைந்து தண்ணீரை இனிப்புச் சுவையுடையதாக ஆக்குகின்றது.

மனிதர்களிலும் இப்படித்தான்!

எல்லாவற்றையும் தனக்கு, தனக்கு என்று பதுக்கி வைத்துக்கொள்கின்ற பஞ்சு பொம்மைகளைப் போன்ற மனிதர்களும், தானும் கெட்டுப் பிறரையும் களங்கப்படுத்துகின்ற களிமண் பொம்மைகளைப் போன்ற மனிதர்களும், தன்னைத் தந்து பிறரை வாழவைக்கின்ற சர்க்கரைப் பொம்மைகளைப் போன்ற மனிதர்களும் இருக்கின்றார்கள். இந்த மனிதப் புனிதத்தைத்தான் இறைவன் நேசிக்கின்றான்.

சமயத் திருவிழாக்களில் ஆடம்பரங்கள், அலங்கார அணிவகுப்புகள், பல்லக்குகளில் பவனி, காதைப் பிளக்கும் வெடிகள், இசைக் கருவிகளின் இரைச்சல் என இவற்றையா இறைவன் நேசிக்கின்றான்?

கண் கூசவைக்கும் மின்விளக்கு வெளிச்சத்தால், பொன்னும், மணியும், வைரமும் கொட்டிக் கிடக்கின்ற இடத்தில் காணமுடியாத இறைவனை இதயத்தின் அன்பு ஒளியில் காணமுடிகின்றது.

நாடாளும் பல்லவ மன்னன் எழுப்பிய கற்றளியில் எழுந்து அருள்பாலிக்காத இறைவன் ஏழை அடியவர் பூசலாரின் அன்பு இதயக் கோயிலில் எழுந்து அருள்பாலித்தாரே!

"இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச் செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை" என்று திருவெம்பாவையில் மணிவாசகப் பெருமான் பாடுவார்.

நான்முகனும், திருமாலும் காணமுடியாத அரும்பெரும் பரம்பொருள் அடியார்களுக்கு, எளியவருக்கு எளியவராய் இல்லங்கள் தோறும் எழுந்து அருள்பாலிக்கின்றார். விண்ணகத்தை விட மண்ணகத்தை மாதேவன் நேசிக்கின்றார்.

மூன்று துறவிகள் ஒருமுறை விண்ணகம் நோக்கிப் பயணிக்கின்றனர். வழியில் ஒரு கருடன் பாம்பைத் தன் கால்களில் கவ்வியவாறு பறந்து கொண்டிருந்தது. பாம்பு துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தது.

ஒரு துறவி அளவுகடந்த இரக்கத்துடன், "பாவம்... இந்தப் பாம்பு எப்படித் துடிக்கின்றது? பாழாய்ப் போன கருடன் இந்தப் பாம்பை விட்டுவிடக் கூடாதா?" என்றார். அடுத்தக் கணம் அந்தத் துறவி பூமியில் விழுந்தார். இரக்கம் உள்ளவர் இருக்க வேண்டிய இடம் பூமிதானே! அதனால் பூமிக்கு வந்துவிட்டார்.

மற்றொரு துறவி, "இந்தப் பாம்பு எவ்வளவுப் பேரைக் கடித்துத் துன்புறுத்துகின்றது. இதற்குப் போய் இரக்கம் காட்டுவார்களா? கண்ட துண்டமாய் இதை வெட்டிப் போட வேண்டும்" என்றார். அடுத்தக் கணமே அந்தத் துறவி நரகத்தில்

விழுந்தார். இரக்கமற்றவர் இருக்க வேண்டிய இடம் நரகம்தானே! அதனால் நரகத்திற்குப் போனார்.

மூன்றாவது துறவி இதனால் வருத்தம், கோபம், கவலை, மகிழ்ச்சி இவைகளின்றி சலனமற்று இருந்தார். அவர் முக்தி அடைந்தார் என்பது கதை.

மகாபாரதத்தில் ஒரு செய்தி. கண்ணபரமாத்மா பாண்டவருக்காகத் தூது போகும் காட்சி. அஸ்தினாபுரத்தில் அவர் எங்கே தங்குவது என்ற கேள்வி எழுகின்றது. கண்ணனை துச்சாதனன் மாளிகையில் தங்க வைத்து உபசரியுங்கள் என்று திருதராஷ்டிரர் கூறுகின்றார். கண்ணன் அஸ்தினாபுரத்தில் நுழைந்ததும் பீஷ்மர், துரோணர், கிருபர், விதுரர் அனைவரும் அவரை வரவேற்கின்றனர். பீஷ்மர் தம் வீட்டில் தங்க அழைப்பு விடுக்கின்றார். துரோணரும், கிருபரும் எனது வீட்டிற்கு வரவேண்டும்: எனது வீட்டிற்கு வரவேண்டும் என்று அழைக்கிறார்கள். "வருகிறேன்" வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே, கண்ணன் அவர்கள் வீடுகளைக் கடந்து போகின்றார். அப்பொழுது தொலைவில் தெரிகின்றது விதுரரின் எளிய குடியிருப்பு. "அது யாருடைய வீடு?" என்று கண்ணன் கேட்கின்றார்.

"கண்ணா! அது உன்னுடைய வீடு" என்று விதுரர் சொல்கிறார்.

"பீஷ்மரும், துரோணரும், கிருபரும் தங்கள் வீட்டுக்கு வரும்படி என்னை அழைத்தார்கள். ஆனால், எனக்கென்று என்னுடைய வீடு இருக்கும்போது நான் இங்கு தங்குவது தானே பொருத்தம்!" என்று சொல்லி, "விதுரரே! வாரும்" நாம் நம் வீட்டுக்குப் போகலாம்" என்றார் கண்ணன்.

யான் எனது என்ற பற்றினை அறுப்பவர் ,மனதில் ஆண்டவன் குடி இருக்கின்றார்.

ஒரு கிராமத்தில் வீடு ஒன்று தீப்பிடித்து எரிந்துக் கொண்டிருக்கிறது. ஒருவன் "ஐயோ! என் வீடு எரிகின்றதே" என்று அழுது கொண்டிருந்தான். அப்பொழுது அங்கு வந்த

ஒருவர், "இந்த வீட்டை உன் அப்பா பண்ணையாருக்கு விற்று விட்டார். காலையில் பத்திரப் பதிவு முடிந்திருக்குமே!" என்றதும் அவன் அழுகை நின்று விட்டது.

எரிவது யாரோ ஒருவர் வீடு என்றதும் அவனது கை, கால்களில் பதற்றம் நின்று விட்டது. விதியை என்ன செய்வது என்று தத்துவச் சொற்பொழிவு தொடங்கி விட்டான். ஆனால், சிறிது நேரத்தில் அங்கு வந்த அவனது அப்பா, "பண்ணையார் ஏமாற்றி விட்டார். பிறிதொரு நாளில் வாங்கிக் கொள்கிறேன் என்று பின்வாங்கி விட்டார்" என்று புலம்பியதும், அவன் மறுபடியும் கண்ணீர் விட்டுக் கதற, வீடு எரிவது நெஞ்சைச் சுடத் தொடங்கியது. வீடு எரிவது துக்கம் தரவில்லை. என்னுடையது எரிகின்றது என்பதே துக்கத்தின் மூலகாரணம்.

விருப்பு வெறுப்புகள், சுக துக்கங்கள் அற்று சமநிலை மனதோடு செயல்படும்போதே இறைமையை நோக்கிய பயணம் ஆரம்பமாகின்றது.

அக்பரின் அரசவையில் இசைச் சக்கரவர்த்தியாய் பரிணமித்தார் "தான்சேன்" என்ற இசைக் கலைஞர். தான்சேன் இசையில் தன்னை இழந்த பேரரசர் அக்பர், ஒருநாள் தான்சேனிடம் தன் விருப்பத்தைக் கூறினார். "தான்சேன்... இந்த இசைஞானத்தை நீ யாரிடம் பெற்றாய்? அவரை நான் பார்க்க வேண்டுமே" என்றார்.

"எனக்கு இசைஞானம் தந்த குருநாதர் "ஹரிதாஸ்;" என்றார் தான்சேன்.

"அவரை நம் தர்பாருக்கு அழைத்து வருக" என்றும் அவர் சங்கீதத்தைக் கேட்க எவ்வளவு சன்மானம் வேண்டுமானாலும் தருகிறேன்" என்றும் கூறினார் அக்பர்.

"சன்மானம் வாங்க விருப்பம் உள்ளவர்களுக்குத் தான் தர முடியும். வாங்கவே விருப்பம் இல்லாதவருக்கு என்ன தரமுடியும்? அங்கீகாரத்தின் ஏக்கமோ, அகங்காரத்தின் தாக்கமோ ஏதும் அற்றவர் என் குரு ஹரிதாஸ். அவர் நம் தர்பாருக்கு வரமாட்டார்.

நாம் தான் அவர் தர்பாருக்குச் செல்ல வேண்டும். நாம் கேட்பதற்காக பாடுபவர் அல்ல. அவர் பாடும் போதுதான் நாம் கேட்க முடியும். அவர் எப்போது இசையாக மாறுகின்றாரோ அப்போது அங்குச் சென்று அவர் இசையைக் கேட்போம்" என்றார் தான்சேன்.

அதிகாலை மூன்று மணிக்கு யமுனா தீரத்தில் உள்ள தம் குடிசையின் முன் ஹரிதாஸ் பக்தி மேலிட வாத்தியங்களை இசைத்துப் பாடுகின்றார்: ஆடுகின்றார். அப்போது அங்கு மறைந்திருந்த அக்பரும், தான்சேனும் அந்த இசையருவியில் திளைத்து இசையாகிப் போனார்கள்.

அரண்மனை திரும்பும்வரை பேச்சற்றபடி இருந்த அக்பர் தான்சேனிடம் "என்ன தான்சேன்! உன் குருவைப் போல் உன்னால் பாட முடியவில்லையே?" என்று கேட்டார்.

அதற்கு "என் இசை பணம், புகழ், பாராட்டு, பதவி என இவற்றை எதிர்பார்த்து இருக்கிறது. என் குருநாதர் ஹரிதாஸ் இசை எந்த எதிர்பார்ப்பும் இல்லாதது! ஒரு மலர் மலர்வதைப் போல், நதி நகர்வ்தைப் போல், நிலவு ஒளி நிரம்பி வழிவதைப் போல், சூரியன் நாளும் உதயமாவதைப் போல், ஆகாயம் விரிந்து நிற்பதைப் போல் ஹரிதாஸ் இசைக்கின்றார். அவர் ஆனந்தம் அடைவதற்காக இசைக்க வில்லை. ஆனந்தத்தில் இருப்பதாலேயே இசைக்கிறார். எந்த எதிர்பார்ப்புகளும் அற்ற அனுபூதியின் கசிவு அது" என்றார் தான்சேன்.

ஓடும் செம்பொன்னும் ஒக்க நோக்கும் திரு உள்ளம். ஞானியின் உள்ளமும், குழந்தையின் உள்ளமும் கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளம்.

அண்மையில் திரு. சுகி. சிவம் அவர்கள் நூலில் படித்ததில் "டோங்கோவாலா" என்ற சிறுகதை நம் இதயத்தை தொட்டது. சிறுகதையின் தலைப்பு "டோங்கோவாலா" மராத்திய சிறுகதை. "டோங்கோவாலா" என்றால் குதிரை வண்டிக்காரர் என்று பொருள். ஏழுவயதுக் குழந்தை ஒன்று தன் பிறந்தநாளைக் கொண்டாட

வேண்டும் என்று தன்தாயிடம் வேண்டுகோள் வைக்கிறது. தன் கணவர் அதிகாரமிக்க உயர் பதவியில் இருப்பதால், குழந்தையின் பிறந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடலாம் என்று அம்மாவும் ஒப்புக் கொள்கிறாள். விழா ஏற்பாடுகள் செய்த நேரத்தில் கணவரின் பதவி, பணிமாற்றம். வருமானம் இல்லாத துறைக்கு மாற்றப்பட்டார். அம்மாவுக்கு மகிழ்ச்சி போயிற்று. பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபாடு காட்டவில்லை. இருந்தபோதிலும் குழந்தையின் நச்சரிப்பால் எல்லா ஏற்பாடுகளையும் செய்தாள். லட்டு, சமோசா என விருந்து உபசரிப்பு. பலரும் வந்து வாழ்த்திச் சென்றார்கள். எல்லோரும் சென்று முடிந்த பிறகு, எட்டரை மணிக்கு வாசல் அழைப்பு மணி அடிக்கின்றது. அம்மா கதவைத் திறந்தாள். குழந்தையைத் தினமும் பள்ளிக்கு அழைத்துப் போகும் குதிரை வண்டிக்காரர் (டோங்கோவாலா) நிற்கின்றார். "என்ன விஷயம்?" என்று அம்மா எரிச்சலோடு கேட்கின்றார்.

"பாப்பாதான்.... பாப்பாதான்... கண்டிப்பாக வரணும்னு சொல்லிச்சு. நான் கூட வரமாட்டேன்னு சொன்னேன். பிறந்தநாள் வாழ்த்துச் சொல்லிட்டுப் போயிடறேன்..." என்று இழுக்கின்றார் குதிரை வண்டிக்காரர்.

"அவளுக்குத் தான் விவரம் தெரியாது. யார் வரலாம்? யார் வரக்கூடாது? என்று. உனக்குப் புரிய வேண்டாமா?" என்று அம்மா வெடித்து விழுந்தார்.

அப்போது குழந்தை ஓடிவந்து "டோங்கோவாலா...." என்றபடி குதிரை வண்டிக்காரர் காலைக் கட்டிக் கொண்டு உள்ளே இழுக்கிறது. "மம்மி.... டோங்கோவாலாவுக்கு லட்டு, சமோசா நான் கொண்டு வருகிறேன்;" என்று ஓடுகிறது.

அம்மா, நான் கொண்டு வருகிறேன் என்று சொல்லி, உள்ளே சென்று சிதறி கிடக்கும் எச்சில் தட்டுகளில் இருந்து ஒரு லட்டு, ஒரு சமோசா எடுத்து, அந்த எச்சில் தட்டுகளில் அதிகம் கசங்காத ஒரு எச்சில் தட்டைச் சரிப்படுத்தி அதில்

வைத்துக் கொண்டு வந்து நீட்டுகிறாள். பணிவோடு பெற்றுக் கொண்ட டோங்கோவாலா. "பாப்பா... நீ சாப்பிட்டியா?" என்று பாசம் பொங்க கேட்கின்றார். "இல்லை. உங்கக்கிட்ட என்ன சொன்னேன்? நீங்க வராம சாப்பிட மாட்டேன் என்று பிராமிஸ் பண்ணிருக்கேன் இல்லையா?! அதனாலே நான் இன்னும் எதுவுமே சாப்பிடலை?" என்று சொல்லி சத்திய தேவதையாய் தலை அசைத்துக் கொண்டிருந்தது.

டோங்கோவாலா அம்மாவைப் பார்த்து, "இது சொன்னா சொன்னது தான். அப்படிப்பட்ட பிள்ளை! பிறந்த நாளைக்கு நான் வராமல் இருந்தால் சாப்பிடாமலே இருந்து விடும் என்றுதான் வந்தேன். இல்லையென்றால் வந்திருக்க மாட்டேன்" என்றபடி குழந்தையைப் பாசம் பொங்கப் பார்க்கின்றார். மீண்டும் அந்தக் குழந்தை டோங்கோவாலா கால்களைக் கட்டி அணைத்துக் கொண்டு, "டோங்கோவாலா நான் உனக்கு லட்டு ஊட்டுகிறேன்" என்று லட்டை எடுத்து அவன் வாயில் ஊட்டப் போனாள். வலுக்கட்டாயமாக அந்த லட்டை திரும்பவும் அவள் வாயில் வைத்து ஊட்டப் போனான் டோங்கோவாலா.

தாய் பதறுகிறாள். எச்சில் லட்டு என்று எப்படி வெளிப்படுத்த முடியும். தடுக்க முயற்சி செய்கிறாள். குழந்தை வலுக்கட்டாயமாக அதை வாங்கித் தன் வாயில் திணித்துக் கொண்டு, "தேங்ஸ் டோங்கோவாலா" என்று கூவுகிறது. அதுதான் குழந்தை உள்ளம். இறைமையின் இல்லம்.

"குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று
குற்றமதை மறந்து விடும் மனத்தால் ஒன்று"

என்கிறார்கள்.

குழந்தையின் அன்புக்கு ஏங்கித் தவிக்கும் ஒரு தாயின் கண்ணீர் கவிதை.

"நான் இறந்தபிறகு எரித்து விடாதீர்கள்.
தயவுசெய்து புதைத்து விடுங்கள்.
அப்போதாவது என் வயிற்றில் ஒரு புழுபூச்சி உண்டாகட்டும்"

என்கின்ற அந்தத் தாயின் ஏக்கம் எவ்வளவு இரக்கத்திற்கு உரியது.

குழந்தைகளின் காதலர் டாக்டர் அப்துல்கலாம்.

"உலக வழக்கப்படி எனக்கு எந்தப் பரம்பரைச் சொத்தும் இல்லை. நான் எதையும் சம்பாதிக்கவில்லை. எதையும் கட்டி வைக்கவில்லை. என்னிடம் எதுவுமே கிடையாது. குடும்பம், மகன்கள், மகள்கள் என யாரும் எனக்குக் கிடையாது.

இந்த மாபெரும் நாட்டில் நான் நன்றாகவே இருக்கிறேன். இதன் கோடிக்கணக்கான சிறுவர் சிறுமிகளைப் பார்க்கிறேன். எனக்குள் இருந்து வற்றாத புனிதத்தை முகந்து இறைவனின் அருள் எங்கும் பரப்ப வேண்டும். ஒரு கிணற்றில் நீர் இறைக்கிற மாதிரி..." என்று தன்னைக் குழந்தைகளுக்கு அர்ப்பணித்தார்.

"என் எலும்புச் சாம்பலை ஏழை விவசாயிகளின் நிலங்களில் தூவுங்கள்" என்றார் குழந்தைகளின் நேசர் நேரு பெருமான். மலர்ந்த ரோஜா மலரை சட்டையில் அணிந்திருப்பதைப் போல, மலர்ந்த குழந்தைகளின் உள்ளங்களை இதயத்தில் அணிந்திருந்தார். குழந்தைகளின் நேசராகிய நேருபெருமானின் பிறந்தநாளை குழந்தைகள் தினமாய்க் கொண்டாடுவது பொருத்தம் தானே!

குழந்தைகளை நேசிப்போம். நல்ல குடிமக்களாய் அவர்களை உருவாக்குவோம்.

குழந்தை உள்ளமே இறைமையின் இல்லம்.

என்றும் வேண்டும் இன்பம் அன்பு

(கையொப்பம்)

"மக்கள் சிந்தனை"யில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள் முதலியவற்றில் அமைந்துள்ள கருத்துக்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்பாவர்.

– ஆசிரியர்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருவாசகத் தேன்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

அடியாரில் கூட்டிய அதிசயம்!

ஆ, அதிசயம்! நினைப்பிற்கு எட்டாததாக நடப்பது அதிசயம்! எதிர்பார்ப்பு இல்லாமல் நடப்பது அதிசயம்! அதிசயம் வியப்பில் ஆழ்த்துவது! அனுபவிப்பவனை அதிர்ச்சிக்குள்ளாக்குவது அதிசயம்! புரவலன்போலத் தோற்றமுடையோன் இரவலன் போல நடந்து கொள்ளுதல் இயல்பாக நிகழாத ஒன்று! ஆதலால், அதிசயம்! ஏன் பணமும் பதவியும் மனிதனைப் போதைக்கு இரையாக்கித் தலைகீழாகவே நடக்கச் செய்யும்! மாறுபட்ட ஒன்று அதிசயம்! இன்றோ மனிதன் மனிதனாக நடந்து கொள்ளுதலே அதிசயக் காட்சியாகி விடுகிறது!

மாணிக்கவாசகர் வரலாற்றில் அதிசயங்கள் நடந்தன. நரிகள் பரிகளானது அதிசயம்தானே! தேவர்கோ அறியாத தேவன் கொற்றாளாய் வந்து மண் சுமந்தது அதிசயம்தானே! யாவரும் விரும்பும் அமைச்சுப் பதவியை மாணிக்கவாசகர் நச்சாது அருளாளரானது அதிசயம்தானே! வான்பழித்து இம் மண் புகுந்து இறைவனால் மாணிக்கவாசகர் ஆட்கொள்ளப் பெற்றதும் அதிசயம்தானே! இனிய தமிழ், இன்பத் தமிழ் தேனூறும் திருவாசகமாக என்புருக்கும் பாடல்களாக அமைந்தமையும் அதிசயம்தானே! இறைவனின் கருணையை இனந்தெரியாத உணர்வில் மாணிக்கவாசகர் அனுபவித்ததின் விளைவு அதிசயப்பத்து.

"நீதி" என்றால் என்ன? மகவெனப் பல்லுயிரும் ஒக்கப்பார்த்து ஒழுகுதல் நீதி! விருப்பு - வெறுப்புகளைக் கடந்து யார்மாட்டும் ஒத்த நிலையில் பழகுதல் நீதி! அவரவர்க்குரியன கிடைக்குமாறு செய்தல் நீதி! கொள்வனவும் கொடுப்பனவும் மிகைபடாமலும் குறைவுபடாமலும் நிகழ்வது நீதி! அகனமர்ந்த ஒழுகுமுறை நீதி! இன்பம் - துன்பம் இவற்றினால் பாதிக்கப்படாமல் ஒரு நிலையாய் நிற்றல் - ஒழுகுதல் நீதி! நீதி - குணம் நீதிக்குணம் மேவிச் செயலில் பொதுமை பொதுளல் நீதி சார்ந்த வாழ்க்கை. நீதியே உலகத்தின் நியதிகளை, முறைமைகளைத் தோற்றுவிக்கின்றது. இயற்கையாய் அமைந்த நீதியிலிருந்தே அரச நீதிகள் பிறந்தன. ஆனால் இயற்கையாய் அமைந்துள்ள நீதியை அரச

நீதிகள் பிறழ்ந்த வரலாறுகள் உண்டு. இயற்கையாய் அமைந்த நீதி யாண்டும் மாறியதில்லை!

மனித குலம் தொடக்கத்தில் நீதியைச் சார்ந்து வாழ்ந்திருக்க வேண்டும். அப்போது கூட்டு வாழ்க்கையும் கூட்டு உழைப்பும் இருந்தன; ஆக்கிரமிப்புக்கள் இல்லை; சுரண்டல் இல்லை. ஆதலால் ஆதிகாலத்தில் மனித வாழ்க்கையில் நீதி இருந்தது. மனிதனின் உடல் வலிமை வளர, வளர, புத்திக் கூர்மை வளர வளர நீதி கெட்டது. பாபக் கழுவாய் முறைகள் தோன்றியதன் விளைவாக பாபங்கள் பெருகி வளர்ந்தன. கடவுளுடன் பேரம் பேசலாம் என்ற நிலை, நீதியை தாழ்த்திவிட்டது! இன்று மனிதன் நீதியைப் பற்றிச் சிந்திப்பதில்லை. தனது வாழ்க்கைக்கு இசைந்தது எதுவோ அதுவே போதும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இயற்கை நியதிகளுக்கும் நீதிகளுக்கும் சட்டங்கள் மாறுபடுகின்றன. ஏன்? மனிதனின் பலவீனத்திலிருந்தே சட்டங்கள் தோன்றின. அந்தச் சட்டங்களையும் மனிதன் இன்று மதிக்கத் தவறுகின்றான்.

இன்று எது நீதி? அவரவரும் நினைத்துக்கொண்டிருப்பதே "நீதி" என்று கருதுகின்றனர். இன்று எங்கு நோக்கினாலும் நீதிக்கும் இயற்கை நியதிக்கும் முரண்பட்டவையே நீதியாகக் கருதப்படுகின்றன. பண்டு உலகத்தை இயக்கியது "வல்லாண்மை"யேயாம்! வல்லாண்மையுடையது வாழும். இது நியதி; நீதி! ஆனால், இயற்கையாய் அமைந்த சமயஞ் சார்ந்த நீதி, வல்லார்க்கு மட்டுமல்ல வாழ்வு, வல்லாண்மை இல்லாதாருக்கும் வாழ்வுண்டு, உரிமையுண்டு என்பதே. நீதிக்கு வேற்றுமை இல்லை; எல்லை இல்லை! காய்தல் இல்லை – உவத்தல் இல்லை! நீதி சார்ந்த வாழ்க்கைமுறை இன்பந்தரும். இந்த வையத்திற்கு இன்றையத் தேவை நீதி சார்ந்த வாழ்க்கை முறையே!

சிவநெறி – சைவ நெறி தொன்மையாது. ஆதலால், சிவநெறி போற்றும் சிவன், நீதியாய் நிற்பவன்! இன்று பணம் பத்தும் செய்கிறது! இன்று பணத்தினால் விலைக்கு வாங்க முடியாதது ஒன்றில்லை! பணமும் அறிவுக்கூர்மையும் இன்று உலகத்தையே ஆட்டிப்படைக்கின்றன. பணமும் அரம்போல் கூர்மையான அறிவும் உடையவர்கள் இன்று நீதியையே விலை பேசுகின்றனர். ஆனால், சிவநெறி இயல்பு இதற்கு முரணானது.

சிவபெருமான் நீதியே வடிவமானவன்! சிவபெருமானை பணபலமுடைய திருமால் தேடியும் காணமுடியவில்லை; நான்கு

வேதங்களின் தலைவனளாக அறிவின் சின்னமாக விளங்கும் நான்முகனாலும் தேடிக்காண இயலவில்லை! ஆனால், திருவாரூரில் பரவையார் வீட்டு வாயிற்படிகளில் சிவபெருமான் திருவடிகள் தோய்ந்தன. ஆதலால் கடவுள் ஆற்றல்மிக்க அன்புவலையில் படுவோன்; பக்தி வல்லயில் படுவோன்! இதனைத் திருவாசகம்,

"பங்கயத்து அயனும் மால் அறியா
நீதியே"

என்பதால் அறியலாம்.

சிவபெருமானின் திருவுருவம் நீதி, சிவனவன் திருநாமம் நீதி என்று உறுதியாகிறது. சிவனைச் சார்ந்த சமயநெறி சிவநெறி. சைவம் – சைவ சமயம் நீதியேயாம்! சைவ நெறியில் கடவுளும் கூடத் தாம் விரும்பியபடி செய்ய இயலாது. ஆன்மாக்ளின் தகுதிப்பாடே சிவனின் அருளிப்பாட்டுக்குக் காரணம். ஆன்மாக்களைப் பக்குவப்படுத்தும் முயற்சியை, கருணையை இறைவன் காட்டலாம். ஆயினும் தகுதியுடையதே வளரும்; வாழும். சிவன் அருளைப் பெறும்! திருவாரூர் இறைவனைத் தோழமையாக நம்பியாரூரர் பெற்றது உண்மை! ஆயினும் வாய்மை பிறழ்ந்தபொழுது, சொல் பிறழ்ந்த நிலையில் கண்ணொளியைப் பறித்த வரலாற்றை ஓர்க! உன்னுக!

காரைக்காலம்மையார் தவம் செய்த தவம்! இறைவனாலேயே "அம்மை" என்று அழைக்கப்பெற்ற புண்ணியவதி! ஆயினும் அம்மையின் விருப்பம் பிறப்பறுக்க வேண்டும் என்பது. பிறவி நீக்கத்திற்குரிய தகுதி இல்லையெனில் என்ன செய்வது? இறைவன்தான் என்ன செய்ய இயலும்? ஆதலால்,

"பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்"

என்று அம்மையார் அருளிய குறிப்பினை உணர்தல் அவசியம்! சேக்கிழார்,

"செய்வானும் செய்வினையும்
அதன் பயனும் கொடுப்பானும்
உய்வகையால் நான்காகும்
விதித்த பொருள்" (சாக்கியார்.புரா.5)

என்றருளியதும் இக்கருத்தினையே அரண் செய்கிறது. ஆதலால் எல்லாருக்கும் – கடவுளுக்கும் கூட நீதிமுறை உண்டு என்பது சிவநெறியின் தனித்தன்மை. இறைவன் உயிர்களை ஆட்கொள்வதற்குப் பணிகளை வழங்குவது நீதிக் குணமேயாகும்.

மாணிக்கவாசகர் அமைச்சுப் பதவியில் இருந்தார். அரசாணையை நிறைவேற்றுதலே அமைச்சருக்குரிய பொறுப்பு; கடமை! இதில் நீதி சார்ந்தவைகளும் இருக்கலாம். நீதி சாராதவைகளும் இருந்திருக்கலாம். வரிப் பணத்தில் குதிரைகள் வாங்கப்போனது நீதிக்கு முரண்தானே! பணியாளர் – அமைச்சர் என்ற பொறுப்பின் வழி மன்னன் ஆணையை நிறைவேற்ற வேண்டியது அமைச்சரின் பணி. மாணிக்கவாசகரின் பணி, இந்தப் பணியை விலக்கிக் கொண்டது அரசியல் ரீதியில் நீதியாகாது; அறநெறி அடிப்படையில் நீதியாகும். குதிரை வரும் என்று சொன்னதும் நீதிக்கு முரணேயாகும். ஏன்? பரிகள் நரிகளாகியதும் நீதிக்கு முரண்தானே! இந்த நிகழ்வினை மாணிக்கவாசகர் சிந்தித்துப் பார்க்கிறார்? அதனால்,

"*நீதி யாவன யாவையும் நினைக்கிலேன்*"

என்று கூறுகின்றார். மாந்தரில் சிலர் இயல்பாகவே நன்னெறி நிற்பர். நீதியைச் சார்ந்து ஒழுகும் சான்றோரின் உறவு கிடைத்தால் அவர் தம்முடன் உள்ள கூட்டத்தின் தாக்கமாக நன்னெறி நிற்கும். நீதியைச் சார்ந்தொழுகும் பெற்றிமையும் கிடைக்கும். மாணிக்கவாசகர் இயல்பாக நீதியை நினைக்கவில்லையாம்! நீதியை நினைப்பவருடன் கூடாமல் அரசு அதிகாரத்தைச் சார்ந்தவருடன் கூட்டு ஏற்பட்டுவிட்டமையைக் குறிப்பிடுகின்றார். நீதி சார்ந்த வாழ்க்கை வாழாத வரையில் பிறவி நீங்காது; பிறந்து இறந்து உழலுதலும் தவிர்க்க முடியாதது என்பது திருவாசக உண்மை.

நீதியைச் சார்ந்து நீதிமானாக வாழ்ந்தாலே பிறவி நீங்கும். நீதியொடு தொடர்பில்லாத இரங்கத்தக்க வாழ்க்கை வாழும்பொழுது கடவுளின் கருணை கிடைக்காது. மன்னித்து மதிப்பளிக்கத்தக்கதாயின் கருணை தேவை! எனவே, "பாதி மாதொடுங்கூடிய பரம்பரன்" ஆட்கொள்கின்றான்.

இறைவன் நிரந்தரம்; நீதி நிரந்தரம். "நிரந்தரமாய நின்ற ஆதி" என்ற தொடர் ஆழ்ந்த சிந்தனைக்குரியது. ஆம்! நாளும் உலகில்

மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. பண்டு இருந்த பல நாடுகள் இப்போது இல்லை. ஆறுகள் இல்லை. மலை, கடலாகி இருக்கிறது. கடல், மலையாகி இருக்கிறது. சில உயிரினங்கள் அழிந்து போயின. வல்லாண்மை வாழும் போராட்டத்தை நடத்திக்கொண்டே இருக்கிறது. இதற்கிடையிலும் இந்த உலகம் நிலைபெற்று இருக்கிறது என்றால் எப்படி? எதனால்?

சிறுமைகளைக் கடந்த பொருள் பொதிந்த புகழுக்குரியவர்கள் செய்த தியாகங்களின் பயனாக உலக வரலாறு இயங்கிக் கொண்டே இருக்கிறது. இப்புவிக் கோளத்தில் மனித குலம் அழிந்துவிடவில்லை. ஏன்? எதனால்? நீதி உணர்வு நிலை பெற்றிருப்பது ஒரு காரணம். அதுமட்டுமல்ல. நீதி என்றும் நிலையானது.

"மனிதனை நேசி!" "மனிதத்தைப் போற்று!" "பிறர் பங்கைத் திருடாதே!" "பிறர்க்கென முயலும் நோன்பினைக் கொள்க!" "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புக!" "எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணுக!" - இன்னோரன்ன நீதி சார்ந்த வாழ்க்கை நெறிகள் என்றும் எப்பொழுதும் நிலைத்திருக்கக்கூடியன. இவையே நீதி, எந்த யுகத்திற்கும் இந்த நீதி தேவைப்படும். ஆதலால், நீதி நிலையானது. நீதி, கடவுளின் மறு உருவம். நீதியே கடவுள்; கடவுளே நீதி. கடவுள் பிறப்பதும் இல்லை; இறப்பதும் இல்லை. கடவுள் என்றும் பேராற்றல் உடையவன். வரம்பில் இன்பம் உடையவன். என்றும் அவன் எண்குணத்தான்; இறைவன் தன்வயத்தனானவன். ஆதலால் இறைவனுக்கு மாற்றம் இல்லை. இறைவன் நிரந்தரமாய் நின்றருள்கின்றான்.

இறைவன் காலங் கடந்தவன்; அநாதி. உயிர்கள் கால தத்துவத்திற்குட்பட்டவை. ஆதலால் ஆதி! ஆதியாக வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கிய ஆன்மாக்களுக்கு ஆதியாகவும் நின்றருள் செய்கின்றான் இறைவன்! ஆம், இறைவன் அநாதி! ஆதி! அந்தம்! ஆனாலும் எந்த நிலையிலும் இறைவன் பாதிக்கப்படுவதில்லை! பிறவி தோறும் ஆன்மாக்கள் பந்தங்களுக்கு ஆளாகின்றன; அதனால் பாதிக்கப்படவும் செய்கின்றன! ஆனால், இறைவன் பாதிக்கப்படவும் செய்கின்றன! ஆனால், இறைவன் எந்தச்சூழ்நிலையிலும் பந்தமற்றவன்; பாதிக்கப்படாதவன். கடையூழிக் காலத்தில் உலகம் இல்லை. ஆயினும் கடவுள் - இறைவன் உள்ளான்! இறைவன் நிரந்தரமாக இருப்பதால்தான் உயிர்க் குலத்திற்கு ஆதியாக விளங்க முடிகிறது. கடையூழிக் காலத்திலும் இறைவன் உலகை மீண்டும் தோற்றுவித்து உயிர்களுக்குப் புத்துயிர்ப்பை வழங்குகின்றான். இறைவன் நிரந்தரமாக இருந்தால்தான் இந்த உலக

இயக்கத்தை - உயிர்க்குல இயக்கத்தை நிரந்தரமாக இயக்கமுடியும். இறைவன் - கடவுள் அநாதி, காலதத்துவத்தைக் கடந்தவன். இறைவன் - கடவுள் இந்த உலகம் இடையீடின்றி இயங்க ஐந்தொழில் நிகழ்த்துபவன். ஆதலால் இறைவன் நிரந்தரம்; ஆதி!

நிரந்தரமான ஆதியைச் சாரும் உயிரினங்கள் செத்துப் பிறக்கும் தொழிலுக்கு இரையாகா, நிரந்தரமாக இறைவன் திருவடி நிழலில் இன்ப அன்பில் வற்றாத முற்றாத ஆனந்தப் பெருவெள்ளத்தில் திளைத்திருக்கும். ஆம்! இறைவன் நிரந்தரம்! ஆதி! உயிர் நிரந்தரம்! ஏன்? ஆணவம் கூட, தன் கொட்டமடங்கிக் கிடக்கும். அதற்கும் கூட அழிவில்லை! அழிவில்லாத நிரந்தரமான கடவுள் சந்நிதியில் அழிவு ஏது? மாற்றங்களே நிகழும்! இறைவனையும் நீதியையும் சார்ந்து வாழும் உயிர்களும் நிலையாக இன்ப அன்பில் தங்கி இன்புறும்.

நீதி யாவன யாவையும் நினைக்கிலேன்
நினைப்பவ ரொடுங் கூடேன்
ஏதமே பிறந்திறந் துழல்வேன் தனை
என்னடி யான் என்று
பாதி மாதொடுங் கூடிய பரம்பரன்
நிரந்தர மாய் நின்ற
ஆதி யாண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயம் கண்டோமே!

(அதிசயப்பத்து-2)

காரைக்குடி கவிஞர் நாவுக்கரசன் மறைவு

காரைக்குடி கவிஞர் நாவுக்கரசன் அவர்கள் 8.9.2015ல் காலமனார் என்பதை "மக்கள் சிந்தனை" மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறது. இப்பெருமகனார் உலகத் திருக்குறள் பேரவையின் சிவகங்கை மாவட்டச் செயலாளராகப் பல்லாண்டுகள் தொண்டு புரிந்தவர். திருக்குறள் பணியை மூச்சாகக் கொண்டு உழைத்தவர். இவர்தம் மறைவு உலகத் திருக்குறள் பேரவைக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இவரை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் இவர்தம் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் மக்கள் சிந்தனை தெரிவித்துக்கொள்கிறது. இப்பெருமகனாரின் நல்லுயிர் இறைவன் திருவடி நீழலில் இன்ப அமைதி பெற இறைஞ்சுகிறது.

– ஆசிரியர்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திரு. க. சிவாஜி, அவர்கள்,
(ஓய்வு பெற்ற கூட்டுறவுத்துறை கூடுதல் பதிவாளர்) எழுதியுள்ள
"கூட்டுறவு இயக்க முன்னோடிகள் வாழ்வும் தொண்டும்" என்ற நூலிலிருந்து

கூட்டுறவு இயக்கத்திற்கும் அரசியலுக்கும் எப்படிப்பட்ட உறவு நிலவ வேண்டும் என்பது குறித்து அடிகளார் பின்வருமாறு கூறினார். குடியாட்சி என்பது மக்களால் ஆளப்படுவது. அதற்கு ஏற்ப, மக்கள் ஆட்சித்திறன் உடையவர்களாக ஆகக் கூட்டுறவை விட சிறந்த சாதனம் இல்லை. இந்தக் கூட்டுறவில் அரசு நேரிடையாகவோ மறைமுகமாகவோ தலையிடுதல் அறவே தவிர்க்கப்படுதல் வேண்டும். கூட்டுறவு இயக்கத்தில் அரசியல் கட்சிகள் - கட்சி உணர்வுகள் புகுந்துவிட அனுமதித்தல் தற்கொலைக்குச் சமம். கூட்டுறவாளர்கள் அரசியல்வாதிகளாக இருக்கலாம். தவறில்லை. ஆனால் அரசியலுக்குக் கூட்டுறவை பயன்படுத்தக்கூடாது. அரசியல்வாதிகள் கூட்டுறவாளர்களாக இருக்கலாம். இருக்க வேண்டும். ஆனால் கூட்டுறவைப் பொதுமையானதாகப் பாதுகாக்க வேண்டும். (துவத்திரு பொன்னம்பல அடிகளார், 2002, பக்கம்-69)

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் நடந்த "எதிர்வரும் இருபத்தோராம் நூற்றாண்டு" என்ற கருத்தரங்கில் நாட்டின் எதிர்காலம் குறித்தும், அதில் கூட்டுறவு இயக்கத்தின் பங்கு குறித்தும் அடிகளார் கூறிய கருத்துக்கள் அவர் கூட்டுறவு இயக்கக் கொள்கைகள் மீது கொண்டிருந்த நம்பிக்கைக்கைக்குச் சிறந்த சான்றாகத் திகழ்கிறது.

கிராமப்புறத்தில் மேற்போக்கான சில நாகரிகங்கள் இருந்தாலும் அதனுடைய அடிப்பரப்பில் இடைக்காலத்தில் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகள், செல்வ ஏற்றத் தாழ்வுகள், சாதி அமைப்புகள், பொருந்தாப் பழக்கங்கள் இல்லை என்று சொல்லிடமுடியாது. இவற்றை மாற்றியமைக்க கிராமத்தின் அனைத்துச் சமூகப் பொருளாதார நிகழ்வுகளும் கூட்டுறவு மூலம் நடைபெற வேண்டும். கூட்டுறவு ஒரு சிறந்த வாழ்க்கை முறை. சிறந்த கூட்டுறவில் பரஸ்பர நம்பிக்கை, நல்லெண்ணம், ஜனநாயகப் பாங்கு, கூடித் தொழில் செய்யும் தன்மை, பயனைப் பகிர்ந்து கொள்ளும் பாங்கு

ஆகியன வளரும். இது இந்தியாவுக்குச் சிறந்த வாழ்க்கை முறையாகும். (துவத்திரு பொன்னம்பல அடிகளார், 2002,பக்கம்-99)

பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் நடந்த "சமுதாயப் பார்வையில் கிராமப்புற மேம்பாடு" எனும் கருத்தரங்கைத் தொடங்கி வைத்துப் பேசும் பொழுது அடிகளார் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"அமரர் நேரு கூறியது போல, இன்று ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பள்ளிக்கூடம், ஒரு கூட்டுறவு, ஒரு பஞ்சாயத்து சபை என மூன்றும் அமைத்துவிட்டன. ஆனால் இவை அமைந்ததால் கிராமங்கள் என்ன பயனை அடைந்தன என்று மதிப்பீடு செய்தால் ஒன்றும் இல்லாதது மட்டுமல்ல. பிரதிகூலத்தையும் தந்துள்ளன என்பதே உண்மை". (துவத்திரு பொன்னம்பல அடிகளார், (2002,பக்கம்-399)

அப்பட்டமான லேவாதேவி நிறுவனமாக, தங்க நகைகளுக்குக் கடன் வழங்குவதையே உயர் குறிக்கோளாகக் கொண்டு தொடக்கக் கூட்டுறவு வங்கி இயங்கி வருவதை அடிகளார் ஏற்கவில்லை. விவசாயத் தொடர்பான அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைந்த முறையில் மண் பரிசோதனை, விதை, உரம், விற்பனை, விவசாயக் கருவிகள் வாடகைக்குத் தருதல், நீர்ப்பாசனம், விவசாய அறிவு வளர்த்தல், உற்பத்தி செய்த பொருள்கள் விற்பனை ஆகியன விவசாய கூட்டுறவு சங்கத்தின் மூலமே நடைபெற வேண்டும் என ஒரு இலட்சியக் கூட்டுறவுச் சங்கத்திற்கான இலக்கணத்தை அடிகளார் வகுத்தளித்தார். (துவத்திரு பொன்னம்பல அடிகளார், 2002,பக்கம்-344)

கூட்டுறவு இயக்கத்தில் வளர்ச்சிப் போக்கினைத் துல்லியமாகக் கணித்த அடிகளார், அதன் முன் உள்ள சவால்களை கோடிட்டுக் காட்டினார். "இந்தியாவில் தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கம் தோல்வி என்றே பரவலாகப் பேசப்படுகிறது. இன்று கூட்டுறவு இயக்கத்தில் பலருக்கு நம்பிக்கை இல்லை. இதற்குக் காரணம் அரசு மட்டுமன்று. மக்களும் ஆவர். எப்போதும் அரசைச் சார்ந்து வாழ்கின்ற நிலையும் தனி உடைமைக் கோட்பாடும் கூட்டுறவு வளர்ச்சிக்குத் தடை. ஆனாலும் கூட்டுறவுத் துறையில் நமது நாட்டு மக்கள் நம்பிக்கை இழக்கக்கூடாது. அரசுகளும் கூட்டுறவுத் துறையை வளப்படுத்துவதன் மூலம் தான் நலிந்த மக்களுக்கு குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு ஆன்மீக பொருளாதார வளர்ச்சிகளைத் தர முடியும் என்று உறுதியாக நம்பி அதற்குரிய வழிவகைகளைக்

காணவேண்டும்". (தவத்திரு பொன்னம்பல அடிகளார், 2002, பக்கம்-360)

மனிதர்களின் பொருளீட்டும் நடவடிக்கைகள் அனைத்தும் கூட்டுறவு முறையில் நடந்தேறினால், ஒரு கூட்டுறவுச் சமுதாயத்தை, உருவாக்கிவிடலாம் என்று அடிகளார் நம்பினார். அடிகளாரின் சமூகச் சிந்தனைகளில் கூட்டுறவுக்கு சிறப்பானதொரு இடம் இருந்தது. சராசரி வாழ்வு நிறைவேறியிருக்கிறது. பல்வேறு களங்களின் பணிகளும் செய்யப்பட்டுள்ளன. மனநிறைவு இல்லாது போனாலும் மனக்குறை இல்லை. ஆயினும் இலக்குகள் எட்டாக் கனிகளாகவே இருப்பது நெஞ்சை அழுத்துவதாக அடிகளார் உணர்ந்தார்.

வறுமையில் வாழும் சாதாரண மனிதர்களின் பொருளாதார ஏற்றத்திற்காக பாடுபட்டவர் அடிகளார். வறுமையை அகற்றிட கூட்டுறவு ஒரு சரியான சாதனம் என அறிந்து செயல்பட்டார். அடிகளாரின் கூட்டுறவுப் பணிகள் முன்னாள் பதிவாளர் வி.கே.அப்பண்டராஜன் அவர்களை வெகுவாகக் கவர்ந்தது. "கூட்டுறவு இயக்கத்திற்கு இன்று என்ன வேண்டுமெனில் அடிகளாரிடமிருந்த நம்பிக்கையும் தன்னலமற்ற சேவையும் தான். எல்லோரும் அவரைப் போல தெய்வீகத் தன்மை அடைய முடியாது. எனினும், அவரது அடியொற்றி கூட்டுறவு இயக்கத்திற்கும், இதன் மூலம் சாதாரண மனிதனுக்கும் உண்மையான தொண்டுகள் செய்யமுடியும் (V.K.Appandarajan, Sri-la-Sri Kundrakudi Adigalar, The Madras Journal of Co-operation, Vol.LV.April 1964,Page 448-449).

குன்றக்குடி அடிகளார் 15.4.1995இல் மறைவுற்றார். தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆன்மீக நெறியில் பற்றுக் கொண்டதோடன்றி தமிழ் மீது தணியாப் பேரார்வமும், புலமையும், பேராற்றலும் கொண்டவராகத் திகழ்ந்து வந்தார். சமயத்துறை மட்டுமின்றி, கல்வி, கூட்டுறவு, தொழில்வளர்ச்சி, பண்பாடு, சமயம் ஆகிய துறைகளிலும் அவர் சீரிய பல பணிகளை ஆற்றியுள்ளார் என அடிகளாரின் பொது நலப்பணிகள் பாராட்டப்பட்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இரங்கல் தீர்மானம் இயற்றப்பட்டது. (Tamil Nadu Legislative Council Debates, Vol 71. 1995, Page 271-272)

மடாதிபதியாக இருந்துகொண்டு, மக்களின் பொருளாதார பிரச்சனைகளுக்கு வழிவகைகளை ஆய்ந்து தேடியவர் அடிகளார். கூட்டுறவுக் கொள்கைகள் இப்படிப்பட்ட பிரச்சனைகளுக்குத் தீர்வளிக்கிறது எனக் கண்டார். பல கூட்டுறவுச் சங்கங்களை தாமே முன்னின்று ஏற்படுத்தி, ஒரு சமதர்ம சமுதாயம் படைக்க முற்பட்டார் அடிகளார். கூட்டுறவு இயக்கத்தை சாமானிய மக்களின் பாதுகாப்பு வளையமாக்கிட பாடுபட்ட பெரும் கூட்டுறவாளர் அடிகளார்.

ஆதாரங்கள் :

1. பொன்னீலன், (2003) தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழகத்தின் ஆன்மீக வழிகாட்டி, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, பக்கம்-8.
2. தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், (2002) குன்றக்குடி அடிகளார் நூல் வரிசை தொகுதி 16 (பொது), மணிவாசகர் பதிப்பகம், சென்னை, பக்கம்-72.
3. அருள் நம்பி, தமிழ்வளர்த்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் குட்டிக்ஸ் பப்ளிகேசன்ஸ், சென்னை, 1999, பக்கம் 24-25.
4. குன்றக்குடி அடிகளார், (1954) நாமும் பூமிதான இயக்கமும் மணிமொழிப் பதிப்பகம், திருப்புத்தூர், இராமநாதபுரம் ஜில்லா, பக்கம்-4.
5. பொன்னீலன் (2003), தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழகத்தின் ஆன்மீக வழிகாட்டி, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, பக்கம்-32.
6. பொன்னீலன் (2003), தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழகத்தின் ஆன்மிக வழிகாட்டி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, பக்கம்-19.
7. தவத்திரு பொன்னம்பல அடிகளார் (2002), குன்றக்குடி அடிகளார் நூல் வரிசை (16), மணிவாசகர் பதிப்பகம், சென்னை, பக்கம்-185.
8. பொன்னீலன் (2003), தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழகத்தின் ஆன்மீக வழிகாட்டி, நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ், சென்னை-பக்கம்-50.
9. பொன்னீலன் (2003), தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழகத்தின் ஆன்மீக வழிகாட்டி, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை, பக்கம்-51.
10. Tamil Nadu Legislative Council Debates, vol.CXIV, 1974,Page-22-24.
11. Tamil Nadu Legislative Council Debates, vol. LXXXIII, 1970, Page 183-185.
12. Tamil Nadu Legislative Council Debates, vol. LXXXIV, 1970, Page-503.
13. Tamil Nadu Legislative Council Debates, vol. LXXXIX, 1971, Page-541-542.

– முற்றும்

நற்றாளை ஏத்தாத நாள்என்ன நாளே!

(கவிஞர். மரு. பரமகுரு)



உலகத்துக் கொருமுதலை, உரைக்கடங்காப் பரனை
கலியுகத்தில் கண்கண்ட கடவுளுமா னவனை
மலைமகளின் திருமகனை மயில்மலைமேல் வைகும்
கலையழகைக் காணாத கண்என்ன கண்ணே!
கடம்பன்உருக் காணாத கண்என்ன கண்ணே!

பிறவாதான் இறைவாதான் பிறந்தஉயிர் எல்லாம்
மறவாமல் காத்திடுவான், வள்ளலவன் முருகன்
குறமானைப் போய்மணந்தான் குன்றைநகர்க் கோமான்
திறல்வேலன் புகழ்கேளாச் செவிஎன்ன செவியே!
சிவக்குமரன் புகழ்கேளாச் செவியென்ன செவியே!

நான்முகனின் தலைகுட்டி நாஅடக்கி யவனின்
வேன்முகத்தால் சூர்தடிந்த வானவர்கள் பதியின்
தேனதிபாய் கழனிகள்சூழ் திருக்குன்றக் குடிவாழ்
ஞானமணி சீர்உரையா நாவென்ன நாவே!
நம்பன்சீர் உரையாத நாவென்ன நாவே!

ஆயதமிழ்ச் சங்கமிருந் தாய்ந்தமுரு கோனை
தூயமனத் தொளிர்ஞானச் சுடராய்நின் றானை
தாயினும் மேலானவனை மேவிகுன்றக் குடிவாழ்
நாயகனை ஏத்தாத நாள்என்ன நாளே!
நற்றாளை ஏத்தாத நாள்என்ன நாளே!

குன்றக்குடி அருள்தரு அறுமுகச் செவ்வேள் பெருமான்

கந்தர்சஷ்டி திருவிழா (12.11.2015 முதல் 18.11.2015 வரை) சிறப்பாக நடந்தேறியது. முதல் ஐந்து நாள்களிலும் அன்பர்கள் இலட்சார்ச்சனை செய்து வழிபட்டனர்.

17.11.2015 ஆறாம் நாள் பெருமான் எழுந்தருளி மாலை 6 மணியளவில் சூரசம்மாரம் நிகழ்ந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்து திருவருள் பெற்றனர்.

பட்டிமன்றத்துப் பாங்கறிந்து ஏறுமின்!

(கிருங்கை. சேதுபதி)

இன்றைக்கு உலக நாடுகளின் இலக்கிய அரங்குகள் தொடங்கி, உள்ளூர்த் திருவிழாக்கள் வரை எங்கும் இடம்பெறும் மேடை நிகழ்வு பட்டிமண்டபம். பட்டிதொட்டியெங்கும் பரவியிருக்கும் இது, தொடக்கத்தில் பட்டிமண்டபம் என்ற பெயரில் அறிமுகம் ஆகி, இப்போது பட்டிமன்றம் ஆகிவிட்டது.

வழக்காடு மன்றமும் இதனை ஒட்டி எழுந்த காரணத்தால், இரண்டையும் ஒருசேரக் கொண்டு, முன்னதன் பட்டி என்பதையும் பின்னதன் மன்றத்தையும் இணைத்துப் பட்டிமன்றம் ஆக்கிவிட்டனர் போலும். இதனை எப்படி அழைப்பது என்பது குறித்தே ஒரு பட்டிமண்டபம் நடத்தும் அளவுக்குத் தமிழறிஞர்கள் பலரும் முயன்றிருக்கின்றனர் என்றாலும், பழந்தமிழ் இலக்கியங்களில் பட்டிமண்டபம் என்ற சொல்லே இடம்பெற்றுள்ளது.

மகத நல் நாட்டு வாள் வாய் வேந்தன் பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண்டபமும் என்கிறது சிலப்பதிகாரம். இத்தொடருக்கு அடியார்க்கு நல்லார் உரை செய்யும்போது, வாட்போர் வாய்ப்புடையோனாகிய மகத வேந்தன், பகையாற்பொருது தாங்கமாட்டாது, அப்பகையிடத்துத் தரப்பட்ட பட்டிமண்டபமும் என்று பொருள் தந்து பட்டிமண்டபம், வித்தியாமண்டபம், ஓலக்கமண்டபம், ஓலக்க மண்டபமென்க என்று விளக்கியுரைக்கிறார்.

பின்னர் எழுந்த மணிமேகலை, ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள் பட்டிமண்டபத்துப் பாங்கறிந் தேறுமின் என்கிறது. தத்தம் சமயத்திற் பொருந்திய பொருள்களைக் குறித்துச் சபதஞ்செய்து வாதிக்கும் சமயவாதிகள், வித்தியா மண்டபத்தில் உரிய இடங்களில் அமர்வீர் என்பது அதன் பொருள். அக்காலத்தில், கலை ஆராய்வதற்கும், வாது புரிவதற்கும் உரிய மண்டபமாக அது விளங்கியிருக்கிறது. பின்னர், திருவாசகத்தில், "பட்டி மண்டப மேற்றினை யேற்றினை" என்று மணிவாசகர் பாடுகின்றார்.

"கரிசறு கவிக்குக் கவி, கமகனுக்குக்
கமகன். வாதிக்குஒரு வாதி
துரிசறு வாக்கி தனக்கொரு வாக்கியாய்
அவர் தொன்று தொட்டு அமைந்து
வரிசையின் வந்த வேள்வியர்பெறாது
வரும்இகல் கடந்த எஃகுஉடையார்
பரிசில்நூற் பயிற்சிஇன்புஎனக்கலை
தேர்பட்டிமண்டபம் பல வயங்கும்"

என்று விரித்து விளக்குகிறது தணிகை புராணம்.

இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக, பன்னருங்கலை தெரி பட்டிமண்டபம் என்ற தொடரைத் தருகிறான் கம்பன்.

இந்த வாக்கியம்தான் இன்றைய பட்டிமண்டபத் தோற்றத்துக்கு முக்கியக் காரணம். இந்த வடிவத்தைச் சென்ற நூற்றாண்டின் 30-களில் முதன் முதலில் கலை இலக்கிய வடிவமாக அரங்கேற்றியது காரைக்குடி கம்பன் கழகம். அதற்கு முன்னதாக, பட்டிமண்டபம் என்ற வடிவத்தை எழுத்து வடிவில் அதன் செயலர் கம்பன் அடிப்பொடி (சா.கணேசன்) எடுத்தாண்டிருக்கிறார்.

1932 ரங்கூனில் தனவணிகன் வார இதழில், பட்டிமண்டபம் என்ற தலைப்பில் செய்தியும் விளக்கமும் எழுதி வந்தேன். பின்னர் காரைக்குடியில் கம்பன் விழாத் தொடங்கிய மூன்றாவது ஆண்டு, 1941-இல் மேடையில் வாதப் பிரதிவாதம் செய்யக்கூடிய முறையில் பட்டிமண்டபத்தை அமைத்தேன்.

கம்பனும் ஒட்டக்கூத்தனும் ஒரு காலத்தவரா என்ற ஆராய்ச்சி முதல் பட்டிமண்டபத்தில் நிகழ்ந்தது என்று அந்நிகழ்வை நினைவு கூர்கிறார். இதற்கான கருத்துருவை எழுத்துருவாக்கி, அவர் வாசித்துவிட்டு அமர, அந்த முதல் பட்டிமண்டபத்துக்கு நடுவராய் வீற்றிருந்தவர் வையாபுரிப்பிள்ளை.

மு. இராகவையங்கார், கே.என்.குமரேச பிள்ளை, கு. அருணாசலம், ஜி. சுப்ரமண்யம் போன்றவர்கள் ஒட்டியும், வெட்டியும் பேசினர் என்றாலும், அம் முதற்பட்டிமன்றத்தில் கட்சி பிரிந்து நின்று அவர்கள் வாதிடவில்லை. அவரவரும் தத்தம் விருப்பப்படி வாதிட்டனர். இறுதியாக, இருவரும் வெவ்வேறு காலத்தவர் என்று நடுவர் தீர்ப்பளித்தார்.

இந்த வடிவத்தை முதலில் அறிமுகப்படுத்திய சா. கணேசன், அதற்கு முன்னதாக இன்னொரு நிகழ்வையும் நடத்தியிருக்கிறார். அதற்கு வேழமுகவில்லியர் என்று பெயர். பேராசிரியர் அ. சீனிவாசராகவனும், கம்பன் அடிப்பொடியும் மேடையில் ஒலிபெருக்கி முன்வந்து அமர, பேராசிரியர், பட்டிமண்டபம் என்றால் என்ன என்று கேட்பார். சா.கணேசன் பதிலுரைப்பார். பின்னர், அதன் பண்டைக்காலப் பான்மைகளை எடுத்துச் சொல்லி, பட்டிமண்டபத்தைத் தொடங்குவார்கள்.

கணேசனுக்கு இன்னொரு பெயர் வேழமுகன். வில்லிபுத்தூராரைத் தந்த மண்ணில் இருந்து வந்த கவிஞர் அ.சீ.ரா. எனவே, முன்னவர் வேழமுகர். பின்னவர் வில்லியார். இருவரும் இணையும் மேடையில்

இவர்கள் வேழமுகவில்லியர். அதன்பின் மண்டபம் தொடங்கும். முதலில், இரு கட்சிகளாகவும், அடுத்து மூன்று அணியினராகவும் வாதிட, பின்னர் பார்வையாளர்களும் பங்கேற்கும் வண்ணம் நோக்கர்கள் தெரிவுசெய்யப் பெற்றனர். அவர்கள் ஒரு கட்சியை நீக்க, வாக்களிக்கவும் செய்தனர்.

எஞ்சிய இரு அணியினரின் வாத, பிரதிவாதங்களை வைத்து, நடுவர் தீர்ப்பளிப்பார். அதிலும் நிறைவுறாது, மேல்முறையீட்டுப் பட்டிமண்டபமும் தொடங்கும். காரைக்குடியில் தொடங்கிய இம்மரபு இன்னமும் புதுவைக் கம்பன் கழகத்தில் தொடர்வதைச் சுவைஞர்கள் காணலாம்.

இந்தப் பின்புலத்தோடு வளர்ந்த பட்டிமண்டபத்தில் பங்கேற்றுப் பெருமைமிக்க ஆளுமை புரிந்தவர்கள் மிகப் பலர். தோழர் ப.ஜீவானந்தம், க.கு. கோதண்டராமன், அ.ச. ஞானசம்பந்தன், தவத்திரு குன்றக்குடி அடிகளார் போன்றோர் குறிப்பிடத்தக்கோர்.

கணவனும், மனைவியும் எதிர்எதிர் அணியில் பேசுவதாக அமைந்த அந்தக்கால நிகழ்வுகள் பெரிதும் சுவைஞர்களை ஈர்த்தவை. வி.கே.சி. நடராஜன் ஓர் அணியிலும், அவர்தம் துணைவியார் இராஜேஸ்வரி எதிர் அணியிலும் வாதிட்டமை அதற்கு ஓர் சான்றாகும்.

இத்தகு நிகழ்வுகளில் நடுவராய் இருந்து தீர்ப்பளித்த தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், தான் பங்கேற்ற 13 நிகழ்வுகளின் உரைகளை, பட்டிமண்டபம் என்றே நூலாக்கியிருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

தொடக்கத்தில் கம்பன் கழகங்களில் மட்டுமே இடம்பெற்ற பட்டிமண்டபத்தைப் பட்டிதொட்டியெங்கும் பட்டிமன்றமாகக் கொண்டு பார்த்தவர் அடிகளார். படித்தவர்களின் – இலக்கிய ரசிகர்களின் செவிநுகர் கனிகளாக விளங்கிய கம்பன் கவிகளோடு, திருக்குறள், சிலம்பு, தேவாரம், பெரியபுராணம், வில்லிபாரதம், பாரதி, பாரதிதாசன் கவிதைகளையும் விவாதப் பொருள்களாக ஆக்கினார். பின்னர், இலக்கியங்களோடு காந்தியம், மார்க்சியம் உள்ளிட்ட இசங்களையும் பேசும் களமாக அது விரிந்தது.

கலை, இலக்கிய, சமய, சமுதாயத் தலைப்புகளில் விவாதிக்கத் தொடங்கிய இவ்வடிவம், படித்தவர் முதல் பாமரர் வரை அனைவரது உள்ளங்களையும் ஈர்த்துச் செம்மைப்படுத்தத் தொடங்கியது.

திருவிழாக் காலக் கூட்டங்களை முன்னிறுத்தித் தொடங்கிய பட்டிமன்றங்கள் காலப்போக்கில் பெரிய திருவிழாக் கூட்டம் எனத்தக்க

அளவில் மக்களைப் பெரிதும் திரட்டி தந்தன. மெய்யாகவே, பட்டிமன்ற மேடையேறினால்தான் பாராட்டும் சிறப்பும் வந்து எய்தும் என்று சொல்லுமளவுக்குப் பரவலான மக்களின் செல்வாக்கைப் பெற்றனர் பேச்சாளர்கள்.

"பட்டிமண்டபத்தின் தந்தை என்று கம்பன் அடிப்பொடியைச் சொன்னால், பட்டிமன்ற ஆசான் என்று அடிகளாரைச் சொல்லலாம். தமிழகத்தின் பல்கலைக்கழகங்கள் எல்லாம் இணைந்து செய்ய வேண்டிய செயலைத் தனிஒரு மனிதராக நின்று செயல்படுத்தியவர் அடிகளார்" என்று பட்டிமன்ற நடுவர் பேராசிரியர் சாலமன் பாப்பையா குறிப்பிடுவது முற்றிலும் உண்மை. அந்த மரபில் நின்று வாதிட்ட பல பெருமக்கள் இன்றைக்குப் பிரபலமானவர்களாக வலம் வருகிறார்கள் என்றாலும், 90-களின் தொடக்கம் வரை, புரட்சிகரமான கருத்துப் புயல்கள் வீசிய அவ்வரங்குகள், மெல்லப் பொழுதுபோக்குக் களங்களாக மலியத் தொடங்கின.

வாழ்க்கைக்கு உதவும் கருத்துகளைச் சொல்லிப் பாராட்டுப் பெறுவதைவிடவும், மலிவான நகைச்சுவைகள் சொல்லிக் கைதட்டல் பெறுவதிலேயே பேச்சாளர்கள் கவனம் செலுத்தத் தொடங்கினர். கருத்துக்கு வலுச்சேர்க்க வேண்டிய நகைச்சுவைகளை விடுத்து, நகைச்சுவைகளுக்காகவே பட்டிமன்றங்கள் அமைக்க அமைப்பாளர்கள் தலைப்பட்டனர்.

காலப்போக்கில், பட்டிமன்றங்கள் பாட்டுமன்றங்களாகவும் நகைச்சுவை உதிர்க்கும் சொல்லாடல் அரங்குகளாகவும் பரிணமிக்கப் பட்டிமன்றம் நீர்த்துப்போனதொரு கலைவடிவமாயிற்று. சின்னத்திரைகளில் விரியத் தொடங்கிய அது பெரிய திரைகளையும் எட்டுகிற வேளையில் முற்றிலும் பொழுதுபோக்கு வடிவமாகவே ஆகிவிட்டது.

சிந்தனைக்குரிய செய்திகளைச் சொல்லுவதும், விளக்குவதும் ஒவ்வாத செயல்கள் என்று மக்கள் நினைப்பதாக ஒரு மாயையை இட்டுக்கட்டி இதுதான் நிலைமை என்று தன் தரம் விடுத்து இறங்கிய காரணத்தால் அறிஞர்களின் மத்தியில் இதன் மதிப்பு குறைந்தும் வருகிறது.

இன்றைக்கு, என்ன தலைப்பு என்று தெரியாமலேயே விவாதிப்பதும், சிரிப்பதற்காகவே உதிர்க்கப்படுகிற - சமூகப் பயன் துளியும் தராத சொந்த அனுபவங்களும், தப்புந்தவறுமாக மேற்கோள் காட்டப்படும் இலக்கியத்

தொடர்களும், எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழின் ஒலிப்புமுறை பற்றித் துளியும் அக்கறையில்லாமல் பெருங்குரல் எடுத்து ஒலிப்பதுமே பட்டிமன்றப் பாணி என்கிற போக்கு வளர்ந்துகொண்டிருக்கிறது.

இது மொழிக்கோ, மக்களுக்கோ நல்லதன்று. பன்முகப் பரிமாணம் உடைய ஒரு மொழியின் ஆற்றல்சார் அறத்தன்மையை நீர்த்துப்போக வைக்கும் ஆபத்து உடையது. இதனை வெறும் வாய்ச்சொல் வீரர்களின் வம்பரங்குகள் என வருந்தலைமுறையினர் எண்ணுதற்கு இடந்தரக் கூடாது.

ஒருவகையில் ஆட்சியாளர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும், பொதுமக்களுக்கும் உதவும் வகையில் அறிஞர்களின் கருத்துரைகளை எடுத்துரைக்கும் களமாக விளங்கும் இதனை, இன்னும் செழுமைப்படுத்த வேண்டியதே இன்றைய தேவை. அதற்கு உண்மையே உயிர். நகைச்சுவை கூடாதென்று நம் கொள்கை. அது மனித மனங்களை மேம்படுத்துவதாக இருக்கவேண்டும்.

பண்டைக் காலத்து மரபுணர்ந்து, சமகாலத்துத் தேவையறிந்து, நல்லறங்களைப் போதிக்கும் குரு பீடத்துக்கு நிகரானது இந்தப் பட்டிமண்டப மேடை. ஒட்டிய தலைப்புகளை விட்டுவிலகாமல் பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின், பைந்தமிழ் பேணுமின்!

– நன்றி : "தினமணி"

முனைவர் புலவர்.ம. **இளங்கீரன்** அவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம்!

உலகத் திருக்குறள் பேரவையின் கோவை மாவட்டச் செயலரான புலவர் திரு.ம. இளங்கீரன் அவர்கள் நல்ல தமிழ்ப்புலவர். திருக்குறள் நெறி பரப்பி வரும் திருத்தொண்டர். கவிஞர்; சொற்பொழிவாளர்; நம் குன்றக்குடி ஆதீனத்தின் உழுவலன்பர். இவர் 2014 டிசம்பரில் முனைவர் (பி.எச்.டி.) பட்டம் பெற்றிருப்பது மிக்க மகிழ்வளிக்கிறது. இந்த ஆய்வறிஞரை "மக்கள் சிந்தனை" பாராட்டி மகிழ்கிறது.

மேலும் இவர் தொடர்ந்து ஆற்றிவரும் திருக்குறள் தொண்டு, தமிழ்த்தொண்டு, திருக்கோயில் தொண்டு ஆகியன சிறக்கவும் 74ஆம் அகவையில் அடியெடுத்து வைக்கும் இவர் மேலும் பல்லாண்டுகள் வாழவும் "மக்கள் சிந்தனை" வாழ்த்துகிறது.

– ஆசிரியர்

தமிழர்களிடம் பெயர்கள் படும்பாடு

(தருமையாதீனப் புலவர். த. குருசாமிதேசிகர்)

தமிழர்களில் முகமதியர் கிறித்துவப் பெருமக்கள் தவிர ஏனையோரிடம் சூட்டப்பட்டு வருகின்ற பெயர்கள், தமிழர் கலைப் பண்பாடுகளைப் புறந்தள்ளி வருவதை நடைமுறையில் சிந்தித்து வருந்த வேண்டியுள்ளது.

நியூமராலஜி என்ற பெயரில் இராமச்சந்திரன் "ராம்சந்தர்" என்றும் "தர்சினி" என்றும் "அனிதா" என்றும் பெயரைக் குறுக்கியும் வடசொல் பொருள் புரியாமலும் சூட்டி வருகின்றனர். பாட்டன் பெயரையும், பாட்டி பெயரையும் வழி வழியாகச் சூட்டிவரும் பழக்கம் விடுதலை பெற்றுவருகிறது. மாயவரம், மயிலாடுதுறையானது போல் விருத்தாச்சலம் திருமுதுகுன்றமாகவும், வேதாரண்யம் திருமறைக்காடாகவும் எந்த அரசும் முயற்சிக்கவில்லை. வடமொழிமோகம் முற்றிய காலத்தில் அங்கயற்கண்ணி மீனாட்சி ஆகியது. சொக்கநாதர் சோமசுந்தரர் ஆனார்.

திருமுறையாக தேவாரத்தில் வடமொழிப்பெயர் அருகியே உள்ளது. தியாகராசர் என்பது வடமொழி பெயர். அதற்கு நேராக "அருள்வள்ளல்" என்பதே திருமுறைப்பெயர். "வடமொழியின் கூட்டுறவால், தமிழ் ஒழிகிறது" என்று பேராசிரியர் திரு. வெள்ளைவாரணனார் ஒருமுறை தமிழ் அர்ச்சனைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

அவர் தொல்காப்பிய வரலாறு எழுதி பெருந்தமிழறிஞர். வடமொழி வரவால் தமிழிலிருந்து முதலில் தெலுங்கு மொழி உண்டாயிற்று. கன்னடம், துளு, மலையாளம் பின் தோன்றிய மொழிகள். தமிழ்நாட்டில் சோழரும் பாண்டியரும் வடமொழிக்கு வரவேற்பு நல்கினாலும் தமிழை முற்றும் போற்றிக் காத்தவர்கள் நால்வர் பெருமக்களும் ஆழ்வார்களுமே ஆவார். வடமொழி தமிழகத்தில் வரவேற்கப்பட்டாலும், பேச்சுவழக்கில் இருந்து தமிழை ஒழிக்க முடியவில்லை. வடமொழி 51 எழுத்துக்களும் மந்திர எழுத்தாகப் போற்றிப் பல சிவாலயங்களில் சிவலிங்கம் வைக்கப்பட்டு, வழிபடப்பட்டு வருகின்ற செய்தி தமிழர் பலர்க்கும் தெரியவேண்டிய செய்தியாகும்.

"தெய்வத்தமிழ்" என்று தமிழ்மொழியைப் பாராட்டினாலும், அப்பெயர் உபசார வழக்கே என்று பாவாணர் கருதுவார். திருவாய்மொழிப்பாடல்கள் இசைப்பாடல்களாக இருந்தாலும் அப்பாடல்களை வேதம் ஓதுவது போல் பாடும் முறையை மரபாக்கி இசையை ஒழித்துவிட்டது திருமால்நெறி. சைவமரபில் ஓதுவார்களிடம் மட்டும்தான் பதிக இசைமரபு நிலவி வருகிறது.

பதிகம் பெற்ற பலதலங்கள் "புகலூர்" "மயிலாடுதுறை" திருவழுந்தூர், குடமூக்கு, திட்டை என்ற நல்லதமிழ்ப் பெயருடன் அமைந்துள்ளன. சங்க நூல்களில் காணப்படாத பலதமிழ் நாட்டுப்பெயர்கள் சமண பௌத்த சமயத் தாக்கத்தால் தமிழர் தம் சமயம் பேணும்முறையில், தண்டலை நீணெறி என்றும் திருநனிபள்ளி என்றும் பெயர் பல எழுந்தன.

கோயம்புத்தூர் என்பது கோசர் பெயரால் ஏற்பட்டது. கோசர் என்பது கோயர் என்றாகி கோயம்புத்தூர் என்று வழங்குகிறது. கோயன்+புத்தூர்; கோயன்புத்தூர் பிறகு கோயம்புத்தூராகியது என்று மயிலை சீனிவேங்கடசாமி ஆய்ந்து கூறியுள்ளார்.

மறைமலை அடிகள், பரிதிமாற்கலைஞர் முதலியோர் தூய தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்டனர். அவர்கள் வழியில் நெடுஞ்செழியனார், நெடுமாறனார் முதலியோர் தமிழ் மறுமலர்ச்சிக்காக முதலில் தங்கள் பெயரை தூய தமிழ்ப் பெயரில் அமைத்து வழிகாட்டினர். எனினும் தூயதமிழியக்கம் பாவாணர், பெருஞ்சித்திரனார் வாழ்வோடு நிறைவுபெற்றுவிட்டது.

வடமொழி மோகத்தால் தமிழ்ப்பெயர்கள் பல மாற்றப்பட்டு தனித்தமிழ் விடைபெற்ற காலம் இந்த நூற்றாண்டு என்றாலும், தமிழியக்கங்களால் "காரியதரிசி"செயலாளர் என்றும், "அக்ராசனர்" தலைவர் என்றும் இன்று மாறி வழக்கத்தில் வந்துவிட்டது. தேர்தலில் நிற்கும் அன்பர்களை முன்பு "அபேட்சகர்" என்று கூறினர். இன்று வேட்பாளர் என்று கூறும் மரபு வந்துவிட்டது. இது இப்படி இருக்க இன்று, தமிழர்களாகிய நமக்கு ஆங்கிலமோகம் தலைவிரித்தாடுகிறது.

திருமண மண்டபங்களில் மணமக்கள் பெயரை ஆங்கிலத்தில் எழுதி, விளம்பரப்படுத்தும் வழக்கம் பெருகிவிட்டது. அதேபோல ஆங்கிலம் கலந்த எழுத்தை தன்பெயர்க்கு முன்பாக எழுதும் வழக்கம் பெருகிவிட்டது.

செட்டிநாட்டுப் பெரியவர்கள் மட்டுமே இன்னும் பழ.செ.மு. முத்தப்ப செட்டியார் என்று குறித்துவருவது மகிழ்வைத் தருவதாகும். அழிந்துவருகின்ற மொழிகளில் தமிழ் 12ஆவது இடத்தில் உள்ளதாக ஆய்வாளர் கூறுகின்றனர். வழிபாட்டிலும் தமிழர்களின் சடங்குகளிலும் தமிழ் விடைபெற்றுவிட்டது என்றாலும் தமிழ்பேச்சுவழக்கில் இருந்து வருவதைக் கண்டு ஆய்வாளர்கள் வியப்படைகின்றனர். பாரதியாரும் பாரதிதாசனாரும் தமிழியக்க அரசியலாரும் தமிழ் வாழ முயற்சித்தும், 21ஆம் நூற்றாண்டில் தமிழ் மக்களிடம் தமிழின் மேலாண்மை குறைந்து வருவதை எண்ணி வருந்தாமல் இருக்க முடியாது.

உலகத் தமிழ்ச் சங்கம், மதுரைத் தமிழ்ச்சங்கம் இதுபற்றி விழிப்புணர்வு உண்டு பண்ண முயற்சிக்க வேண்டும். ஆழமான தமிழ்ப்படிப்பு கல்லூரிகளில் குறைந்து வருகிறது. திறனாய்வு நூல்களைப் படிப்பிக்கும் முறை வளர்ந்து மூல நூல்களை ஒதுக்கும் மனப்பான்மை வளர்ந்துவிட்டது. முன்பு கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் தமிழகப் புலவர் குழு அமைத்து, தமிழறிஞர்களை ஒருங்கிணைத்து தமிழுக்குப் புத்துணர்ச்சியூட்டிய இயக்கம் மறைந்துவிட்டது. "தமிழறிஞர்கள் இன்று யார்" என்று அறியவே முடியாமல் மறைவாக உள்ளனர். ஒருங்கு இணைக்கும் வல்லமை குறைந்துவிட்டது. தமிழறிஞர்களிடம்!

"செம்மொழி இயக்கம்" தமிழுக்குப் பெருமை சேர்த்தாலும் செந்தமிழறிந்தார் இன்று எண்ணிக்கையில் குறைந்துவருவதோடு, அவர்கள் மறைந்தும் வருகின்றனர். கணினியின் வருகையால் நன்மையை விடத் தீமையே தமிழ்க்கு நேர்ந்துவருகிறது. பேராசிரியர் முதலியோர் இன்று பாடல்களை மனப்பாடம் செய்வதில் பின்வாங்கி, கணினி பார்த்து மகிழும் அளவிற்கு அறிவை வளர்த்து வருகின்றனர். சிறுகதைகளும் நாவல்களும் கல்லூரியில் பாடமாக்கி திறனாய்வு செய்வதால், பழங்காப்பியங்களில் உள்ள நயங்களை தமிழ் மாணவர்கள் உணர்வதில் பின்னடைவு ஏற்படுகிறது; ஏற்பட்டுள்ளது. எப்படியோ? மூலநூல் படிப்பு வளரவேண்டும்!

மீண்டும் தமிழ் எழுச்சிபெறுவதில் ஆங்கிலத்தில் இருந்து விடைபெற வேண்டும். கோயிலில் தமிழ் இல்லை! வடமொழிக்கு தொல்காப்பியம் வரையறை செய்தது போல், ஆங்கில வரவுக்கும் ஒருவரையறை செய்வது சான்றோர் கடனாகும். தமிழைப் புறந்தள்ளிய ஆங்கில விளம்பர மனப்பான்மை தமிழரிடம் வளர்வது நன்றன்று!

"சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே" என்பது பாரதியார் வாக்கு, தமிழர் செவியில் என்று ஏறுமோ?

புதிய மானுடமே மகாகவியின் நோக்கம்

(20.9.15 -ஆம் நாள் தேவகோட்டை க.இ.பெருமன்றம் நடத்திய 55-ஆம் ஆண்டு மகாகவி பாரதி விழாவில், குருமகாசந்நிதானம் தவத்திரு பொன்னம்பல அடிகளார் ஆற்றிய பேருரை!)

மகாகவிகளுக்கு எத்தனையோ பல அடையாளங்கள் இருக்கின்றன; அவை எவை என்று விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை; மிக எளிதாகவே புரிந்துகொண்டு விடலாம்; எந்தக் கவிஞன் ஒரு புதிய மானுடம் நோக்கிப் பயணிக்கின்றானோ, அவனைத்தான் "மகாகவி" என்று நமது சமுதாயம் இனம் கண்டு ஏற்றுக்கொள்ளும்; அவ்வகையில்தான், ஒரு புதிய திசை நோக்கி, ஒரு புதிய மானுடம் நோக்கி, தனது கவிப் பயணத்தைச் செலுத்திய பாரதியை நாம் "மகாகவி" என்று போற்றிப் பாராட்டுகிறோம்.

ஒரு புதிய திசைநோக்கி நமது சமுதாயத்தைத் தட்டி எழுப்பி, நடத்தியவன் மகாகவி பாரதி. கொள்கைப் பிடிப்புள்ள ஒரு நீண்ட பயணத்திற்கு வறுமை, ஏழ்மை ஒரு தடையாக இருக்க முடியாது என்பதை வாழ்ந்து காட்டியவன் மகாகவி பாரதி. வறுமையில் செம்மையாக, வறுமையில் உண்மையாக வாழ்ந்து காட்டி வெற்றி பெற்றவர்கள் நமது சமுதாயத்தில், நம்முன்னே சாட்சியங்களாக நிற்பதை நாம் பார்க்கிறோம். பாரதியின் வாழ்க்கை முழுதும் வறுமை; வாழ்க்கை முழுதும் போராட்டம்; ஆனால் பாரதி செம்மையாக வாழ்ந்து காட்டினான்; எட்டையபுரம் பாரதியை வடதிசை நோக்கித் துரத்தியது; காசிக்குச் செல்பவர்கள் தங்களைப் புனிதப்படுத்திக் கொள்ளவே செல்வார்கள். ஆனால் மகாகவி பாரதியின் வாழ்க்கைப் பயணத்தில் காசிப் பயணமும், காசி வாழ்க்கையும் வேறுவிதமாக அமைந்துவிட்டது! இது ஓர் அதிசயமான வரலாற்று நிகழ்வு! பாரதி காசிக்குப் போய்த் தங்கியதால், காசியம்பதி புனிதம் அடைந்துவிட்டது! சுருக்கமாகச் சொன்னால், "காசியம்பதியைக் கவிபாரதி புனிதம் செய்தான்" என்றுதான் சொல்லவேண்டும்! (பலத்த கைதட்டல்); புனிதம் செய்தான் என்ற தொடர்ப்பிரயோகத்தை வெறும் ஆன்மிக மயமாக மட்டும் அணுகாமல், கவித்துவ ரீதியாக, சமுதாய ரீதியாகவும்

நாம் பார்க்க வேண்டும். இந்தப் புனிதப் படுத்தல் என்பது மகாகவி பாரதியைப் பொறுத்த அளவில்; அவனது வாழ்க்கை நிகழ்வுகளைப் பொறுத்த அளவில், காசியம்பதியோடு நின்றுவிடவில்லை; அதுதான் மகாகவியிடம் நாம் காண்கிற பெருமை! மகாகவி பாரதி குழந்தைகளைப் புனிதம் செய்தான்! "மன்னும் இமயமலை எங்கள் மலையே" என்று மலையைப் புனிதம் செய்தான்! அவன் வாழ்ந்த வீடும் புனிதமானது; நாடும் புனிதமானது! மகாகவி பாடிய "பாப்பா பாட்டு" ஏதோ ஒரு குழந்தைப் பாட்டு அல்ல; அது ஒரு புதிய சமுதாயத்தைக் கட்டமைப்பதற்கான "நாற்றங்கால் பாட்டு" (பலத்த கைதட்டல்); பாரதி இப்படி தேசம் என்றும் தேசத்தின் விடுதலை என்றும், திரிந்து அலைந்தபோது வீட்டில் இருந்த செல்லம்மாள் சிறிது பயந்துதான் போனார். "செல்லம்மா ஏன் கவலைப்படுகிறாய்? நான் தேசத்தின் உரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறேன். நீ பயம் கொள்ள வேண்டியதில்லை..." என்று செல்லம்மாகவுக்குத் தைரியம் ஊட்டிய மகாகவி பாரதி அடுத்துச் சொன்ன வார்த்தைகள் அபூர்வமானவை. "செல்லம்மா, உனக்குக் கவலைகள் வரும்போதெல்லாம் நீ தமிழைப்படி" என்றான். வாழ்நாள் கவலைகளுக்கு உரிய மருந்து, அரிய மருந்து தமிழ் என்கிற பாரதியின் வாசகம் சிந்திக்கத்தக்கது.

மகாகவி பாரதியையும், பாரதிபோற்றிய அண்ணல் காந்தியடிகளையும், காந்தியடிகள் போற்றிய பேராசான் ஜீவாவையும் இணைத்துச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இம்மூவரும் வாழ்ந்து காட்டிய மண்ணில் சாதியின் பெயரால், மதத்தின் பெயரால், கோயிலின் பெயரால் சமுதாயத்தில் மோதல்களும் முரண்பாடுகளும் எழுந்து சமுதாய ஒற்றுமையை, நல்லிணக்கத்தைக் குலைப்பதுதான் வேதனை தருகிறது. பூசலார் நாயனாார் எழுப்பிய உள்ளம் என்கிற கோவிலே எனக்குப் போதும் என்று இறைவன் அறிவித்ததாகப் பெரிய புராணம் பேசுகிறது. அப்படிப்பட்ட தமிழ் மண்ணில் கோயில்கள் பெயரால் முரண்பாடு தோன்றலாமா? (பலத்த கைதட்டல்); ஏழை எளிய மக்கள் உடுத்தும் சாதாரணமான, மிகக் குறைந்த ஆடையே எனக்குப் போதும் என்று அறிவித்து, அந்த எளிய கோலத்திலேயே அண்ணல் காந்தி, உலகப்புகழ்பெற்ற வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டாரே, அத்தகைய காந்தி வாழ்ந்த நாட்டில் ஆடம்பரம் ஆட்டிப்படைக்கிறதே, இது நியாயமா? (பலத்த கைதட்டல்); ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, புகழ்பெற்ற பூரி ஜகந்நாதர்

ஆலயத்தில் நுழைய அனுமதி இல்லை என்று மறுக்கப்பட்டபோது, "ஏழை, எளிய மக்களுக்கு அனுமதி இல்லை என்றால், எனக்கு அங்கே என்ன வேலை?" என்று அறிவித்து கோவிலுக்குள் போக மறுத்தவர் அண்ணல் காந்தி! ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நான் போராடும்போது, யாராவது துப்பாக்கியால் சுட்டுவிட்டால், "ஹே ராம்" என்று சொல்லி வீழ்ந்து சாவதையே விரும்புகிறேன் என்று அறிவித்தவர் அண்ணல் காந்தி. இந்த அருமைகளையெல்லாம் உணர்ந்துதான், நம்முடைய மகாகவி பாரதி, "வாழ்க நீ, எம்மான், இந்த வையத்து நாட்டில் எல்லாம்" என்று பாடினான்; இந்த அருமைகளையும் பெருமைகளையும் உணர்ந்துதான், அண்ணல் காந்தி சிறாவயல் கிராமத்துக்கு வந்த போது, நமது அருமைப் பேராசான் ஜீவா, தனது கைகளால் ராட்டை சுற்றி நூற்று வைத்திருந்த கதர்நூல் மாலையை காந்தியடிகளுக்கு அணிவித்து வரவேற்றார்! இவையெல்லாம் வெறும் நிகழ்வுகள் அல்ல, நமது நெஞ்சங்களை உருக்கும் புனிதச் சரித்திரங்கள்! (நீண்ட கைதட்டல்).

இந்த வரலாற்று நிகழ்வுகளையெல்லாம், இப்போது நடக்கும் நிகழ்கால அவலங்களோடு ஒப்பிட்டுச் சிந்தித்துப் பார்ப்பது நமது கடமையாகும். காந்தியடிகளும், ஜீவாவும் வாழ்ந்து நடமாடிய இந்தத் தமிழ் மண்ணில், சின்னஞ்சிறு குழந்தை மதுப்புட்டியோடு காட்சியளிக்கிறதே, இது என்ன நியாயம்? கல்விக் கூடங்களில் அறிவும் பண்பாடும், கலையும் கலாச்சாரமும் ஓங்கி மிளிர்வதற்குப் பதிலாக வன்முறைகள் மேலோங்கி வருகிறதே, இது என்ன நியாயம்? நமது சமுதாயம் எந்தத் திசைநோக்கிப் பயணம் செய்கிறது என்று அச்சத்தோடும், பொறுப்போடும் நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்! அச்சமும் அவலமும் சூழ்ந்த இந்த இருட்டுப் பயணத்தில் நமக்கு வழிகாட்டுவதற்கு வெளிச்சம் தேவை! அந்த வெளிச்சத்தை, ஒளியை நாம் மகாகவி பாரதியிடமிருந்துதான் பெறவேண்டும்! "எல்லாரும் ஓர் குலம்! எல்லாரும் ஓர் இனம்! எல்லாரும் இந்திய மக்கள்! எல்லாரும் ஓர் நிரை! எல்லாரும் ஓர் விலை" என்பது மகாகவி பாரதி நமக்கு வழங்கிச் சென்றிருக்கிற சமுதாய, அரசியல் சாசனப் பிரகடனம்! இந்தப் பிரகடனத்தை உயர்த்திப் பிடித்து, அந்த வெளிச்சத்தில் பயணம் செய்ய வேண்டியது நமது கடமை! அந்தக் கடமையை உணர்ந்து, ஆண்டுதோறும் மகாகவி பாரதிக்கு விழா எடுத்து, மிகச் சிறப்பாகக் கொண்டாடிவரும் தேவகோட்டை கலை இலக்கியப் பெருமன்றத்தையும், மன்றப் பொறுப்பாளர்களையும் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம்!

செய்தியாக்கக் கட்டுரை : மு. பழனிஇராகுலதாசன்

அப்துல்கலாம்!
உன்னை மறக்கமுடியுமா?

(மானாகுடி தில்லை நடராஜன்)

அன்பு கண்ட ஆண்டவனே அப்துல் கலாம்ஒரு மன்னவனே!
ஆக்கம் கொடுத்த ஆண்டவன் உனக்கு ஆசையை
கொடுக்கவில்லையே!
இவ்வுலகில் உன்னைப்போல் ஒரு மனிதர் இனிமேலும் பிறப்பாரா?
ஈடின்றி இணையின்றி ஈகை உள்ளம் கொண்டவரே!
உண்மையும் உறவும் உன் உடம்பில் ஊறிய இரத்தமே!
ஊக்கமும், ஆக்கமும் தந்தாய் மக்களுக்கு ஏக்கம் தந்தாய்
இந்தியாவிற்கு,
எம்மதமும் சம்மதம் என்று நிரூபித்த கொற்றவனே!
ஏவுகணையில் இவ்வுலகில் ஏற்றம்கண்ட நாயகனே!
ஐம்புலனும் அடக்கி ஆண்ட அன்பு நிறைந்த அற்புதமே!
ஒழுக்கத்தில் உன்னைப்பற்றி உலகமே போற்றுகின்றதே!
ஓவியமான பிறவி என்று உலகமே நேசிக்கிறதே!
ஔவை மட்டும் இருந்திருந்தால் அறிவான புகழ்பாடி மகிழ்ந்திருப்பாள்,
இறைவனிடம் அருள் காட்டி இறைவனடி சேர்ந்துவிட்டாய்!
இந்தியாவின் மக்களை எல்லாம் துன்பத்தில் ஆழ்த்திவிட்டாய்!
உறங்காத சூரியனாய் உழைத்து விட்டாய் இந்தியாவில்,
உன்உடல் மறைந்தாலும் உன் உண்மைநிலை மறையாது, மாறாது.

ஈரோடு சிவத்திரு. அ. முனுசாமி முதலியார் மறைவு

ஈரோடு அருள்நெறித் திருக்கூட்டத்தலைவரும், ஈரோடு அருள்நெறித் திருப்பணிமன்றம் மேல்நிலைப்பள்ளி முன்னாள் தாளாளரும் குன்றக்குடி ஆதீனத்தின் உழுவலன்பருமான ஈரோடு கயிலைமணி சிவத்திரு. அ. முனுசாமி முதலியார் அவர்கள் 28.10.2015 அன்று காலமானார். இப்பெருமகன்ாரின் மறைவு அருள்நெறி இயக்கத்திற்குப் பேரிழப்பாகும். இவரை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் இவர்தம் குடும்பத்தினருக்கும் அன்பர்களுக்கும் "மக்கள் சிந்தனை" ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறது..

மறைந்த கயிலைமணி சிவத்திரு அ. முனுசாமி அவர்களின் நல்லுயிர் சிவனடி நீழலில் இன்ப அமைதி பெற இறைஞ்சுகிறது..

– ஆசிரியர்

சிலம்பில் சிலம்பு பிரியப் பிரிய...

(தமிழாகரர். தெ. முருகசாமி)



சிலம்பை மையமாகக் கொண்டு காப்பியம் படைத்த இளங்கோவடிகளின் நாடகத்திறன் உத்திக்கோர் எடுத்துக் காட்டாகவே சிலப்பதிகாரத்தில் எங்கெங்கெல்லாம் சிலம்பு பிரிகின்றதோ அங்கங்கெல்லாம் கதையின் போக்கும் விரிகிறது என்பதைச் சுட்ட விழைகிறது இக்கட்டுரை.

காப்பியத் தலைப்பு சிலம்பு, காப்பியப் பெண் மாந்தர்களுள் கண்ணகி, பாண்டிமாதேவி என்ற இருவரின் சிலம்புகள் தொடர்பாகவே கதை விறுவிறுப்படைகிறது. இவ்விரு மாதரசிகளும் தம்காலில் சிலம்பணிந்து காப்பியத்தில் காட்சி தந்ததாக நிகழ்ச்சிகளை அமைக்காத இளங்கோவடிகள் அவர்களின் கால்களிலிருந்து பிரிந்துவிட்ட சிலம்புகளின் செயல்பாடுகளைக் கொண்டே கதையை நகர்த்தச் செய்ததுதான் இளங்கோவின் காப்பியத் திறனையும் நாடகத் திறனையும் ஒருங்கே உணர உதவுகின்றன.

புனைக்கோல நாடக மாதான மாதவி காலில் சிலம்பணிந்து நடனமாடியது பற்றிக் கோவலன வசந்தமாலையிடம கூறினான். காப்பிய இறுதியில் கண்ணகித் தெய்வம், சிலம்பணிந்து காட்சி தருவதாக இளங்கோ கூறுகிறார். சிலம்பணிந்ததாகக் காட்டும் இவைகளால் கதையில் விறுவிறுப்பமையவில்லை. ஆனால் காப்பியத் தலைமைப் பாத்திரமாகிய கண்ணகியின் கால்களில் சிலம்பணிந்திருந்ததாகக் காட்டாமலேயே சிலம்பணிந்திருந்தார் என்று அனுமானமாக உணருமாறு கதையை நடத்திச் சென்றதுதான் இளங்கோவடிகளின் நாடகத்திற்கான வெற்றி எனலாம். அவ்வாறே கண்ணகியைப் போலப் பாண்டிமாதேவியின் கால்களில் சிலம்பணியாத நிலையிலேயே சிலம்பைக் கழற்றி வைக்கப்பட்ட சூழலில் கதையை நடத்திச் செல்கிறார் இளங்கோ. இவ்விரு நிலைகளாலும் கதைப்போக்கு விறுவிறுப்படைகிறது.

இல்லற வாழ்வில் கோவலன், மாதவியை நாடிச் சென்றதும் கண்ணகி முதன்முதலில் தன் கால்களில் கிடந்த சிலம்புகளையே பிரித்தெடுக்கின்றாள், "அஞ்செஞ் சீறடி அணிச்சிலம் பொழிய" (அந்திமாலை -47) என்பது இளங்கோ வாக்கு. பின்னர் மாதவியை

வெறுத்துக் கண்ணகியையடைந்த கோவலனிடம் கண்ணகி, "சிலம்புள கொண்ம்" எனத் தன்னிடமிருந்து பிரித்துக் கொடுக்க முற்பட்டாள். காலில் கிடந்த சிலம்பு, கைக்குப் பிரிய கண்ணகியின் கையிலிருந்து கணவன் கைக்குப் பிரியும் நிலை ஏற்பட்டது. இருப்பினும் சிலம்பை முதலாகக் கொண்டு வாழ முற்பட்ட முடிவால் தம்பதியர் இருவரும் சோழ நாட்டை விட்டுப் பிரிந்து பாண்டி நாடுக்குப் பிரியும் போது சிலம்பும் நாடுவிட்டு நாடு பிரிகின்றது.

பாண்டி மண்டலப் புறச்சேரியில் தங்கிய போது கண்ணகியிடம் இருந்த இரண்டு சிலம்பில் ஒன்றைப் பிரித்தெடுத்துப் போய், கோவலன் விலை பேச முற்படுகிறான், "சீறடிச் சிலம்பில் ஒன்று கொண்டி யான்போய், மாறி வருகுவன்" (கொலைக் 92-93) எனக் கோவலன் கூறுவதாகக் கூறும் இளங்கோவின் வாசகத்தில் சிலம்புபற்றிக் கூறிய கருத்தில் வேறுபாடு தெரிகிறது.

கண்ணகி காலிலிருந்து கழற்றியபோது அஞ்செஞ்சீறடி அணிச் சிலம்பாக இருந்தது, கணவன் விற்பதற்காகப் பிரித்தபோது சீறடிச் சிலம்பாகிவிட்டது. அஞ்செஞ் சீறடி என்றும் அணிச்சிலம்பென்றும் அடைமொழியுடன், கண்ணகியின் கால்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சிலம்பு, ஈண்டு அடைமொழியின்றிப் பிரிக்கப்பட்டதால் சிலம்பின் உடைப்பால் பின்னர் சேதாரம் அடையப்போவதைக் குறிப்பாக உணர்த்தும் வாசகமாகவே கருத்து வாசம் (மணம்) வீசுகின்றதன்றோ!

ஒற்றைச் சிலம்பை விற்கப் போன கோவலனை எமன் வரவேற்றதுபோல் அவன்முன் அரண்மனைப் பொற்கொல்லன் எதிர்ப்பட்டான். அப்பொற்கொல்லனிடம் கோவலன் சிலம்பைக் காட்டியதும் ஒரு விளக்கு இன்னொரு விளக்கை ஏற்றும் என்றவாறு, "கரந்து யான் கொண்ட காலணி ஈங்குப் பரந்து வெளிப்படாமுன்" (கொலைக்.127-128) எனப் பொற்கொல்லன் திட்டமிட்ட நிலையில் கோவலனைக் கள்வனாக்கிக் கொலைபுரியச் செய்ததோடு கோவலனிடமிருந்த ஒற்றைச் சிலம்பை அரண்மனையில் சேர்த்துவிட்டான்.

ஈண்டுப் பொற்கொல்லன் தனக்குள் கூறிக் கொண்ட கூற்றாலும் செய்த செயலாலும் அரண்மனைச் சிலம்பு ஒரு குடிமகன் வீட்டுக்கு வந்திட்ட சூழலும் குடிமகள் ஒருத்தியின் சிலம்பு அரண்மனைக்குக் குடியேறிய சூழலுமாகக் கதை பின்னப்படும்போது நாடகச் சுவை முறுக்கேறுகிறது. மேலும் பாண்டிமாதேவியின் ஒரு சிலம்புதான் களவாடப்பட்ட நிலையில்

பிரிக்கப்பட்டதென்பதும் தெளிவாகிறது. இவ்வுண்மை "கொன்றச் சிலம்பு கொணர்க" (கொலைக்.153) எனப் பாண்டியனது ஆணைவாசகத்தாலும் உறுதிப்படுகிறது. இந்நிலையில் கணவன் சிலம்பு திருடிய கள்வன் எனக் கூறிக் கொலைப்பட்டதையறிந்த கண்ணகி நீதிகேட்கப் புறப்படுகையில், "நின்ற சிலம்பொனறு கையேந்தி" (ஊர்சூழ்.2)ப் புறப்பட்டதாக இளங்கோ கூறுகிறார். நின்ற சிலம்பொன்று என்றதால் பிரிந்திருந்த ஒரு சிலம்பு என்பது கருத்தாயிற்று. "செம்பொற் சிலம்பொன்று கையேந்தி நம் பொருட்டால் வம்பப் பெருந்தெய்வம் வந்தது" என்றே ஊர்மக்கள் கண்ணகியை ஒற்றைச் சிலம்புடன் கண்டு அஞ்சினர்.

ஈண்டு, "நின்ற சிலம்பொன்று" – என்றதற்கு, எஞ்சி நின்ற என்பதாகப் பொருள்படினும் நீதியை நிலைநாட்டச் சான்றுக்காய்ப் பிரிந்து நின்ற என்பதாகப் பொருள் காணலாம், தலைவன் சொன்ன சொல் மாறாமல் நிற்கக்கூடியவன் எனத் தலைவனது ஒழுக்கத்தில் நம்பிக்கை கொண்டு "நின்ற சொல்லர்" எனக் கூறும் நற்றிணைத் தலைவியின் கூற்றில் உள்ள அழுத்தம் இளங்கோவின் நின்ற சிலம்பொன்று என்ற கூற்றில் உள்ளது எனலாம். ஏனெனில் கோவலன் கொண்டு சென்ற சிலம்பு என்னவாயிற்றோ என அறியா நிலையில் கண்ணகிக்கு நீதியை நிலைநாட்ட நின்ற சிலம்பொன்றே சாட்சிக்குரியதாய் இருந்ததால் "நின்ற" என்றதன் அழுத்தம் சிலம்பைப் பிரித்த நாடகச் சுவையைக் கூடுதலாக்குகிறது எனலாம்.

வழக்காட அரண்மனைக்கு வந்த கண்ணகி, "இணையரிச் சிலம்பொன்று ஏந்தியவள், கணவனையிழந்தாள், கடையகத்தாள்" என மன்னனிடம் கூற வேண்டி வாயிற் காவலனிடம் கூறுகிறாள். அவனும் ஒற்றைச் சிலம்புடன் வந்தவளைப் பற்றியே (வழக்கு.42) மன்னனிடம் கூறினான்.

மாணிக்கப் பரலுடைய சிலம்பு என்பதை அடையாளப்படுத்த "இணையரிச் சிலம்பு ஒன்று" எனக் கண்ணகி கூறினாளாயினும் ஏந்திவந்த சிலம்புக்கு ஒப்புமை சொல்லல் அரிது என நினைவுபடுத்துவாள் போல் கூறினாள் எனலாம். இணை – ஒப்புமை, அரி – சொல்லற்கு அரிதான எனப் பிரித்தறியும்போது, கொண்டுவந்த இச்சிலம்பைப் போன்றதே முன்பு என்கணவனால் கொண்டுவந்த சிலம்பு எனக் கூறாமல் கூறச் செய்ததாயிற்று. இதற்கேற்பவே மன்னன் ஆணையிட அவைக்குக் கொண்டுவரப்பட்ட சிலம்பை உடைத்து நீதியை நிலைநாட்டினாள் கண்ணகி. ஈண்டு கூறும் சிலம்புடைப்பென்பது சிலம்பின் பிரிப்பையே உணர்த்திற்று.

கோவலன் கொணர்ந்த சிலம்பை உடைத்து நீதி நிலைநாட்டிய கண்ணகி, நீதியை நிலைநாட்ட ஏந்திவந்த சிலம்பு என்ன வாயிற்றெனில் மன்னவன் இறந்துபட, மாதேவியும் இறந்துபடும் சூழலில் கண்ணகி, அவள்முன் வீசி எறிந்து வஞ்சினம் சாற்றி வெளியேறினாள். இச்செயல் வழக்குரைத்த நிலையிலேயே நிகழ்ந்தாலும இது பற்றியதை இளங்கோ வஞ்சிக் காண்டத்தில் சாத்தனார் உரைப்பதானகூற்றில் விளக்கிக் காட்டியுள்ளார்.

சேரன் செங்குட்டுவன் மலைவளம் காணவந்தபோது குன்றக் குறவர்கள் மூலம் கண்ணகி பற்றி கருத்தையறிந்து, சாத்தனாரிடம் அவள்பற்றிக் கூற வினவியபோது

வலம்படு தானை மன்னன் முன்னர்ச்
சிலம்பொடு சென்ற சேயிழை வழக்கும்
செஞ்சிலம் பெறிந்து தேவி முன்னர்
வஞ்சினம் சாற்றிய மாபெரும் பத்தினி (சாட்சி.71-4)

எனச் சாத்தனார் கூறினார்.

வழக்காடச் சாட்சிக்காகக் கொண்டுசென்ற சிலம்பை உடைக்காமல் முன்பு கோவலன் விலைபேச எடுத்து வந்த சிலம்பை உடைத்தே நீதியைக் கண்ணகி நிலைநாட்டியதும் எஞ்சிய ஏந்திவந்த சிலம்பைத் தேவி முன்னர் எறிந்து வஞ்சினம் சாற்றினாள். ஈண்டு எறிந்து என்றது முழு சிலம்பையும் வீசி எறிந்து என்பது கருத்தாம் என்க.

எறிந்து என்பதற்கு உடைத்து எனப்பொருள்படினும் காற்சிலம்பு உடைப்ப என்றே வழக்குரைத்தபோது கூறிய இளங்கோ ஈண்டு எஞ்சி நின்ற ஒற்றைச் சிலம்பைத் தேவிமுன்னர் எறிந்தாள் என்பதை உறுதிப்படுத்தும் நிலையிலேயே இலக்கணப் பொருள் பொருத்தத்தில் சொற்களைப் பாவியுள்ளார் (பரப்பி) அடிகள்.

சொற்களைக் கொண்டு கூட்டும்போது "தேவிமுன்னர் செஞ்சிலம் பெறிந்து வஞ்சினம் சாற்றிய" என்றாகும். இதனால் சிலம்பை எறிந்ததற்குப் பின்னர் வஞ்சினம் சாற்றிய உண்மை புலனாகிறது. இங்ஙனம் தேவியின் முன்னர் சிலம்பை எறிவதற்கு முன்பே சிலம்பை உடைத்து வழக்கை முடித்துவைத்த உண்மை - சிலம்பொடு சென்ற சேயிழை வழக்கும் என்றதால் உணரப்படும்போது ஏந்திவந்த சிலம்பைத் தேவிமுன்னர் எறிந்தாள் என்பதே கதைத் தொடர்ச்சியும் இயல்பாய் உள்ளதை உணரலாம். அங்ஙனமாயின் சிலம்பைத் தேவிமுன்

எறிவதால் யாது பயன் என்றவினாவிற்கு விடை தேடலின்தான் ஓர் உண்மை ஒளிந்துள்ளதை அறிந்து இன்புறலாம் என்க!

தருகெனத் தந்து தான்முன் வைப்பக்
கண்ணகி யணிமணிக் காற்சிலம் புடைப்ப (வழக். 70-71)

என்றதால் மன்னன்முன்பாகச் சிலம்பு உடைக்கப்பட்டதால் கோவலன் கள்வனல்லன் என்ற உண்மை வெளிப்பட்டாற்போலத் தேவி முன்பாக எஞ்சிய சிலம்பு எறியப்பட்டதால் தேவிக்கிருந்த சிலம்பு பற்றிய அறியாமை வெளிப்படலாயிற்று எனலாம்.

அதாவது, திருடப்பட்ட சிலம்பு கிடைத்துவிட்ட நிலையில் அரசி அதை வாங்கிப் பார்த்ததாகக் கதைப்போக்கு அமையவில்லை. தான் கொண்ட ஊடல் தீர்க்கும் கருவியாகச் சிலம்பைக் கருதிய நிலையில் அதுபற்றிய மயக்கில் வாளா இருந்துவிட்டாள். சிலம்பைப் போட்டுப் பார்த்துப் பழகியவள் என்பதால் அரசி அதைப் பார்த்திருந்தால் இஃது தன்னதன்று எனக்கூற வாய்ப்பிருந்திருக்கும். ஏனெனில் சிலம்புக்குள் இருக்கும் முத்து அல்லது மாணிக்கம் போன்ற பரலைக்காண வாய்ப்பில்லையாயினும் புறத்தோற்றத்தில் சோழ நாட்டு வேலைப்பாட்டிற்கும் பாண்டிய நாட்டு வேலைப்பாட்டிற்கும் சிறு வேற்றுமையாவது புலப்பட்டிருக்கும். மேலும் காலில் போட்டுப் பழகிய சிலம்பின் அளவும் வேறுபாடாக இருந்ததும் தெரிந்திருக்க வாய்ப்புண்டு. எனவே இப்படியாக ஐயப்படுதற்குரிய காரணங்கள் பல இருக்கவும் அவையெல்லாம் அறியப்படாமலேயே மாதேவி இருந்துவிட்டதுதான் கண்ணகிக்கு வியப்பாகத் தோன்றியிருக்கக்கூடும். ஏனெனில் சிலம்பு பற்றிய வேறுபாட்டைப் பிறர் அறிவதினும் போட்டுப் பழகியவள் அறிவது எளிது என்பதால் மாதேவி, கிடைத்த சிலம்பு பற்றியதில் அக்கறை காட்டாதவளாக இருந்துள்ள நிலையில் அல்லது கிடைத்த சிலம்பு தன்னுடையதே எனக் கூறிய அளவில் ஒப்புக்கொண்டதாய் அமைந்துவிட்டதால் கோவலன் கள்வன் என முடிவெடுத்தற்கு ஒத்துழைத்தவளாகிவிட்டாள் எனக் கண்ணகி நினைக்கக் காரணமாயிற்று எனலாம். இந்நிலையில் எனது ஒற்றைச் சிலம்பை விரும்பிய மாதேவியே அச்சிலம்பு உடைபட்டு விட்டதால் இதோ உடைபடாத முழுச் சிலம்பைத் தருகிறேன் எடுத்துக்கொள் என்ற உணர்வுகளையெல்லாம் கூட்டி உணர்ந்த அளவிலேயே கண்ணகி தேவிமுன்னர் செஞ்சிலம்பை எறிந்தாள் எனலாம்.

இங்ஙனம் எறிவதால் யாதொரு பயனும் கண்ணகிக்குக் கிட்டப்போவதில்லையாயினும் சிலம்பின் தொடர்பாகவே கணவன் கொலை செய்யப்படுதற்கு மாதேவியின் ஒப்புதலும் இருந்திருக்கும் எனக் கண்ணகி அனுமானித்தே எஞ்சிய ஒற்றைச் சிலம்பை அரசிக்குப் பரிசாகத் தருவாள் போல வீசி எறிந்தாள் எனக் கருதுவதில் காப்பியப் போக்கில் தவறில்லை. ஏனெனில் கோவலன் கொலையுண்ட சூழலைக் கண்ணகியறிந்தாளில்லை. அதாவது பொற்கொல்லன் சூழ்ச்சி, மாதேவியன ஊடல் போன்ற நிகழ்வுகளின் பின்னணியில் கணவனுக்கு இறப்பு நேர்ந்ததாகக் கண்ணகியறியாளாதலால் தன் கணவனது இறப்புக்கு மாதேவியும் உடந்தையானவள் எனக் கண்ணகி அனுமானிக்க ஏதுவாயிற்று என உணர்வதில் குறையில்லை என்றே கூறலாம்.

இவையெல்லாவற்றிற்கும் மேலாகப் பாண்டியன் அவையில் நடந்த தேவிமுன் சிலம்பெறிந்த நிகழ்ச்சியை ஆண்டே கூறாமல் இளங்கோ, சேரநாட்டுக் கதைத் தொடர்பில் கூறுவானேன்! எனில் - காப்பியத் தலைப்பிற்கேற்பவும் காப்பியத்தைப் பகுத்துக் கொண்ட மூன்று காண்டப் பிரிவுக்கேற்பவும் சிலம்பு பற்றிய செய்திகள் பரிமாறப்படவேண்டும் என்ற குறிப்போடே தேவிமுன்னர் செஞ்சிலம் பெறிந்த புதுச்செய்திப் புதையலாக மறைந்திருந்து வெளிப்பட்டது எனலாம், இஃதன்றி வேறு எந்தக் காரணம் கூறினும் பொருந்தாதென்றே கூறலாம்.

இப்படியாகச் சிலப்பதிகாரத்தில் சிலம்புகள் பிரியப் பிரிய கதை விரிவடையும் விறுவிறுப்பில் கதாபாத்திரங்களைப் பிரியும் சிலம்புகளோடே ஒப்பிட்டுணரச் செய்வார் போலவே இளங்கோவடிகளின் நாடகப் பண்பையும் உணர்ந்து போற்றலாம்.

கண்ணகியும் கோவலனும் சோழநாட்டுச் சிலம்புகள். இருவரும் பிரிந்து கூடுகின்றனர். கண்ணகியின் கால்களை விட்டுப் பிரிந்த சிலம்புகள் "சிலம்புள கொண்ம்" என்பதால் கைகளில் ஒன்று கூடி நின்றபோது கோவலன் கைப்பிடித்துக் கண்ணகியுடன் மதுரைக்குப் புறப்படுகிறான். சிலம்புகளும் கண்ணகி கோவலனும் சோழநாட்டைவிட்டே பிரிகின்றனர்.

பாண்டியனும் மாதேவியும் பாண்டிய நாட்டுச் சிலம்புகள் போன்றவர். மாதேவியின் ஒற்றைச் சிலம்பின் பிரிப்புபோல் பாண்டியனின் இறப்பு நிகழ்கிறது. பொற்கொல்லனால் சிலம்பு பிரிக்கப்பட்டது போலவே பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட என்றே கூறி மன்னன் இறப்பதால் பொற்கொல்லனின் செயல் - சிலம்பின் பிரிவுக்கும் மன்னனின் உயிர்ப் பிரிவுக்கும் காரணமாகிவிடுகிறது. கோவலன் கொண்டுபோன சிலம்பு பின்னர் கண்ணகியால் உடைக்கப்பட்டுப்

பிரிக்கப்பட்டதுபோல எஞ்சி நின்ற சிலம்பாய்க் கண்ணகி வழக்காடவும் உடைபட்டுப் பிரியும் சிலம்பின் முன்னோட்டமாகக் கோவலன் உடல் வேறு உயிர் வேறாய்ப் பிரியவுமாகக் கதைப்பாங்கு அமைந்துவிட்டது.

ஏந்திவந்த சிலம்பைத் தேவிமுன் எறிந்து பிரித்ததுபோலக் கண்ணகி தன்னையே தெய்வமாக்கிக் கொண்டாள் என்பதற்கு ஒப்பாம் எனலாம்.பொற்கொல்லனால் பிரிக்கப்பட்ட ஒரு சிலம்பைப் போல் மன்னன் பிரிந்ததும் மற்றொரு சிலம்பாக இருந்த மாதேவி எஞ்சிய ஒற்றைச் சிலம்பால் பயன் இன்மைபோலத் தான் வாழ்வதால் பயனில்லைஎனக் கருதி "கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்" எனக்கூறி இறந்துபட்டாள். ஆக சிலம்புகள் பிரிவும் கதாபாத்திரப்பிரிவும் ஒன்றி நின்று சிலப்பதிகாரத்தை நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமாக்கின எனில் அதில் அட்டி உண்டோ?

தூத்துக்குடியில்
மகளிர் கடமையும், உரிமையும் கருத்தரங்கம்

உலகத் திருக்குறள் பேரவையின், தூத்துக்குடி மாவட்டக் கிளையின் மாதாந்திரக் கூட்டம் தூத்துக்குடி சி.எம். மேல்நிலைப்பள்ளியில் ஏ.பி.சி. மகாலெட்சுமி மகளிர் கல்லூரி வரலாற்றுத்துறை பேராசிரியர் சாந்தக்குமாரி தலைமையில், பேராசிரியர் சவகர்லால் முன்னிலையில் நடைபெற்றது.

உலக் திருக்குறள் பேரவையின் தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் திருக்குறள் மோ. அன்பழகன் வரவேற்றுப் பேசினார்.

கல்லூரி மாணவி செல்வி. பொன்விநாயகம் "ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை" என்னும் தலைப்பில் குறளுரையாற்றினார்.

மகளிர் கடமையும், உரிமையும் என்னும் பொதுத் தலைப்பில், பிறந்த இடத்தில் எனும் துணைத் தலைப்பில் ஆசிரியர் பொன்தேவிகா, புகுந்த இடத்தில் என்னும் தலைப்பில் ஆசிரியர் சுந்தரி, சமுதாயத்தில் எனும் தலைப்பில் கால்டுவெல் கல்லூரி சமூகவியல் துறை பேராசிரியர் சுப்புலெட்சுமி ஆகியோர் உரையாற்றினார்கள்.

ஆசிரியர் வளர்மதி நன்றி கூறினார்.

கருத்தரங்கில் தனபாலன், கருவூல அலுவலர் கணேசன், பேராசிரியர் கந்தசாமி, ஆசிரியர் அருமைநாயகம், அறிவுச் செல்வம், பாலசுப்பிரமணியன், பொறியாளர் தபராசு, எழுத்தாளர் சிறிதரகணேசன், செய்யது முகமது செரிப், முருகையா, தனபால், சுந்தரேசன், கவிஞர் ஆனந்தராசு, சந்தானம், கணேசன், திருமதி. பழனியம்மாள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

– மோ. அன்பழகன்

1998 ஆம் ஆண்டு மக்கள் அளித்த தீர்ப்பு

தமிழ் வழிபாட்டு மொழி – மக்கள் பேராதரவு வாக்கெடுப்பு முடிவு

தமிழ்நாட்டுக் கோவில்களில் அர்ச்சனை மொழியாக தமிழ் இருக்க வேண்டுமா? அல்லது சமஸ்கிருதம் இருக்க வேண்டுமா? என்பது பற்றி பக்தர்களின் விருப்பத்தினை அறிவதற்காக முக்கியமான 9 கோவில்களில் 27.11.98 அன்று காலை 6 மணி முதல் 9 மணி வரை பக்தர்களிடம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

மூன்று மண நேரம் மட்டுமே நடந்த இவ்வாக்கெடுப்பில் மொத்தம் 18700 பக்தர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் தமிழுக்கு ஆதரவாக 17695 பேர்களும், சமஸ்கிருதத்திற்கு ஆதரவாக 823 பேர்களும இரு மொழிகளும் இருக்கலாம் என 182 பேர்களும் வாக்களித்துள்ளனர்.

பதிவான வாக்குகளில் அர்ச்சனை மொழியாக தமிழே இருக்க வேண்டும் என 94.63 சதவிகிதத்தினரும், சமஸ்கிருதத்திற்கு ஆதரவாக 4,40 சதவிகிதத்தினரும் இருமொழிக்கு ஆதரவாக 0.97 சதவிகிதத்தினரும் தீர்ப்பளித்துள்ளனர்.

– நன்றி : தென் ஆசியச் செய்தி
(2015 செப்டம்பர் 16-30)

அன்பான வேண்டுகோள்!

சமுதாய மாமுனிவராகத் திகழ்ந்த நமது அருள்நெறித் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஆழமான சிந்தனைகளை அடியொற்றி நடைபோடும் "மக்கள் சிந்தனை" மாத இதழ் மேலும் பலம் பெறுவதற்குத் தங்களின் ஆதரவு தேவை. நமது கருத்து பரவலாக மக்களைச் சென்றடைய இதழ் அவசியம்.

ஆயுள் சந்தாவாகவோ, அல்லது ஆண்டுச் சந்தாவாகவோ அல்லது புரவலர் தொகையாகவோ மக்கள் சிந்தனை இதழுக்கு வழங்கி மக்களின் சிந்தனைகளை அகம்கொண்டு வெளிவர உதவுங்கள். "மக்கள் சிந்தனை"யின் பணி சிறப்புடன் தொடர வாசகராக, படைப்பாளராக சந்தாதாரராக விளம்பரதாரராக மாறுங்கள்; இன்றே சமய சமுதாயப் பணியை வலிமைப்படுத்துங்கள்.

– ஆசிரியர்

ஏற்றமுற்றான் குமணன்

(கவிஞர். பரணி)



குமணன் என்ற மன்னன் நல்ல
குணம் மிகுந்த காந்தன்
அமணன் என்ற தம்பியாலே
அரசிழந்த வேந்தன்
முரசிழந்து முடியிழந்து
முதலிழந்த போதும்
அறபிறந்திடாது காட்டில்
அன்பில் வாழ்ந்து வந்தான்
காட்டி லிருந்த அரசன் தன்னைக்
கண்டு பரிசு வாங்க
பாட்டுப்பாடி வந்து நின்றான்
சாந்தன் என்ற பண்பன்
அரசனாயிருந்தி ருந்தால்
அரசும் கூடத் தருவேன்
தரமறிந்து தக்க பரிசு
தந்து சிந்தை மகிழ்வேன்
தம்பி சொன்ன சேதிகேட்டு,
இன்று நான் மகிழ்ந்தேன்
தம்பிகையில் என்றன் தலையைத்
தந்து பொன்கள் பெறுவீர்
என்றன் தலையை வெட்டிச் சென்று
ஆயிரம் பொன் பெறுவீர்
என்று சொன்னகுமணன் போலே
இன்று யாரும் உண்டோ?
இல்லை என்று வந்தவர்க்கே (தன்னிடத்தில்)
இல்லை என்ற போதும்
இல்லை என்று சொல்லிடாது
ஏற்ற முற்றான் குமணன்.

சிறப்பாசிரியருக்கு வந்த கடிதம்....

தவமாமுனி அகத்தியனின உருவாக் தோன்றி, மனத்தே பரிபூரண பேரின்பத்தைப் பரப்பி வருகை புரிந்த தவத்திரு, அடிகளே சரணம். அருள் மணம் சுமந்த நேற்றைய வழிபாட்டுமன்ற விழாவில் அடியேனும் கலந்து கண்டது உறையூராகத் தோன்றவில்லை! (புரவலர் கயிலை சிவத்திரு. சாத்தப்பன் அவர்களுடன் வீற்றிருந்ததால்)

அற்புதமாக அமைந்த அருளுரையிடையே எத்துணை முறைகள் மெய்யன்பர்களின் கரவொலிகள்! எங்கள் (வாய்ப்பாட்டு) இசை நிகழ்ச்சிகளில் பிரபலமாகிய வித்வான்கள், "நல்லா பழுத்திட்டது!" என்று பாராட்டுவர். அதுபோல, அடியேனுக்குத் தோன்றியது வேறு. ஆம்... அன்று மக்களை வயப்படுத்திய மகாசந்நிதானத்தின் பேருரை போன்றிருந்தது! (பட்டிமன்ற சகாப்தம் தான் மகாசந்நிதானத்துடன் முடிந்து போனதே!)

நேற்றைய ஒரு மணிநேர அருளுரையில் நினைவிற்கு வந்தவை. "நயம்பட உரை" - "மொழிவ தற மொழி" "பிறர்க்கு இன்னுரைதானே" - "ஊற்றுக்கோல் ஒழுக்கமுடையார் வாய்ச் சொற்கள்" - "கேட்டார் பிணிக்குத் தகைய" - "அதுவுமற்றவர் வாய்ச்சொல்லருளீர்"

அகவை எண்பது கடந்துள்ள யான் மிகுதியாகக் கற்றிலன். ஆயினும் (கேள்வி) செவிச் செல்வத்தை ஓரளவு பெற, இறையருட்பேறு கிட்டியுள்ளது.

- நெல்லை ஆ. சுப்பிரமணியன்
உறையூர், திருச்சி.

கருத்து வேற்றுமைகள்வழி பகைமையை வளர்த்தல் எந்த சூழ்நிலையிலும் கருத்துக்களில் தெளிவு காண முடியாது போய் மானிட வாழ்க்கையில் தேக்கம் ஏற்பட்டுவிடும்.

கருத்து வேற்றுமைகள் நூற்றுக்கு நூறு எப்போதும் இருக்க இயலாது. ஆதலால், மனிதகுல ஒருமைப்பாடு கருதியும் அறிவு வளர்ச்சி கருதியும் உடன்பாடுடைய கருத்துக்களில் ஒன்றுபட்டு செயல்படத் தொடங்கினால் காலப்போக்கில் உறவுகள் வளரும். தெளிந்த அறிவியல் முடிவுகளும் கிடைக்கும் இந்த முறையே நமது அணுகுமுறை.

- அருள்நெறித்தந்தை

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

சிறப்பாசிரியர் : **தவத்திரு பொன்னம்பல அடிகளார்**

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின்அட்டை வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	½ பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ.	8.00
ஆண்டுச்சந்தா	ரூ.	90.00
ஆயுட் சந்தா	ரூ.	1000.00
புரவலர் கட்டணம்	ரூ.	2000.00

சந்தா – விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி
மக்கள் சிந்தனை
குன்றக்குடி – 630 206
சிவகங்கை மாவட்டம்
தொலைபேசி எண் : 04577 - 264227

இந்தியன் வங்கி, பிள்ளையார்பட்டி கணக்கு எண் : 554267544 மூலமும் மணியார்டர், வங்கி வரைவோலை / காசோலை மூலமும் அனுப்பலாம்.

ஆதீன இணையதள முகவரி : website : www.kkmutt.org

ஆசிரியர் : **மரு. பரமகுரு**

அச்சிட்டு வெளியிடுவோர் : ஸ்ரீ சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி

BOOK POST
Book pocket containing printed matter
MAKKAL CHINTHANAI-November 2015

Price Rs. 8-00
Date of Publication 30-11-2015

பெறுநர்

திரு திருவருள்திரு சுவாமிகள் அவர்கள்,
கோவிலூர் ஆதீனம்,
கோவிலூர்,
மானகிரி-(அஞ்சல்),
காரைக்குடி-(வழி). அவர்கள்

அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. ✆ : 264166